பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 15 திங்கட்கிழமை 30.11.2020 கதிர் 25


### இது ரகசியம் அல்ல!

தென்னிலங்கை அரசியல் விவகாரங்களை ஒட்டி சமூக ஊடகங்களில் கட்டவிழும் பல விடயங்கள் சுவாரஸியமானவை. அவை பல சமயங்களில் தமிழ் வாசர்களின் கவனத்துக்கு வருவதில்லை.

அப்படிப்பட்ட ஒரு தகவலை - விடயத்தை - இன்று பக்கம்02 »

### தொடரும் ராஜபக்ஷ அரசின் அட்டூழியம்

# கார்த்திகை தீபம் ஏற்றிய யாழ். பல்கலை மாணவன் கைதாகி வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுதலை





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)


யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலயத்துக்கு நேரே உள்ள பண்பாட்டு வாயிலில் கார்த்திகை தீபம் ஏற்றிய மாணவன் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் மசகையா தர்ஷிகன் என்பவரே 02 »

# இறுதி நேரத்தில் அஜித் டோவல் சம்பந்தனுடன் திடீர் சந்திப்பு



## சத்தம் சந்தடியின்றி நடந்தது



கொழும்பு, நவம்பர் 30

முத்தரப்புப் பாதுகாப்புப் பற்றிய பேச்சுக்களுக்காக கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் நேற்று நாட்டை விட்டுப் புறப்படவிருந்த சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அழைத்து மூடிய அறைக்குள் சுமார் முப்பது நிமிட நேரம் பேச்சு நடத்தினார்.

அஜித் டோவலின் கொழும்பு நிகழ்ச்சி நிரலில் முன்னர் அறிவிக்கப்படாத இந்தச் சந்திப்பு சத்தம் சந்தடியின்றி நேற்று நடைபெற்றிருக்கின்றது. 02 »

## நாட்டில் மேலும் ஏழு பேர் கொரோனாவுக்குப் பலி

### காவு எண்ணிக்கை 116 ஆக உயர்வு

இலங்கையில் மேலும் 7 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்கள் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 02 »

## வடக்கில் நேற்று 5 பேருக்குத் தொற்று வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

தொழில் நிமித்தம் வடக்கு மாகாணத்தில் தங்கியிருந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்திய 02 »

## கிளிநொச்சியில் இராணுவத்தினர் அராஜகம் கார்த்திகை விளக்குகளைத் தூக்கி எறிந்தனர்

### வீடுகளில் இருந்தவர்களுக்கும் அச்சுறுத்தல்

கிளிநொச்சி மாவட்டத்திலும் கார்த்திகை விளக்கீட்டுக்கு இராணுவம் இடையூறு ஏற்படுத்தியதுடன் மக்களை அச்சுறுத்தும் வகையிலும் செயற்பட்டுள்ளனர்.

நேற்று மாலை பரந்தன் பகுதியில் கார்த்திகை விளக்கீட்டுக்காகத் தீபம் ஏற்றிய வயோதிபத் தம்பதி இராணுவத்தினரால் மிரட்டப்பட்டு விளக்குகளும் தூக்கிவீசப்பட்டன என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வழமைபோல் கார்த்திகை விளக்கீட்டுக் காக விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. வீட்டு முற்றத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்த நிலையில் வீட்டு 02 »

## நேற்றும் 496 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 496 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 23 ஆயிரத்து 02 »

# மஹர சிறையில் வன்முறை; 4 கைதிகள் சுட்டுக்கொலை!

### 25 பேர் படுகாயங்களுடன் ராகம வைத்தியசாலையில்

கொழும்பு, நவம்பர் 30

மஹர சிறைச்சாலையில் நேற்று மாலை தொடக்கம் நள்ளிரவு வரை தொடர்ந்த வன்முறைகளில் 4 கைதிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 25 கைதிகள் படுகாயமடைந்துள்ளனர். 02 »





# கண்டியில் மீண்டும் நிலநடுக்கம்

கண்டி மாவட்டத்தில் திகன உட்பட சில பகுதிகளில் நேற்றிரவு 9.04 மணியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

புவிச்சரிதவியல் ஆய்வுத் திணைக்களம் இதனை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில், கடந்த 4 மாதங்களில் ஏற்பட்ட 4ஆவது நில அதிர்வு உணர்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

முந்தைய தலைமுறைக்கு 1972 இல் வெளியாகி, சக்கை போடு போட்ட ஒரு ஹிந்தி நகைச்சுவைப்படம் பரிச்சயமாக இருக்கும். சீதா ஓர் கீதா' (Seeta Aur Geeta) என்பது அந்தப் படத்தின் பெயர். நடிகை ஹேமாமாலினி, நடிகர்கள் தர்மேந்திரா, சஞ்சீவ்குமார் என்று அந்த நேரத்தில் கலக்கிய ஹிந்தி நடிகர்கள் நடித்த படம். வசூலிலும் அள்ளிக் கொட்டிய திரைப்படம்.

இரட்டைப் பிள்ளைகளான சீதாவும், கீதாவும். பிரிந்து வெவ்வேறு இடங்களில் வித்தியாசமாக வளர்வது பற்றிய படம் இது என்ற நினைப்பு 45 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் ஏதோ ஒரு தியேட்டரில் இதைப் பார்த்த ஞாபகத்தில் எனக்கு உண்டு.

சரி. இந்தப் படத்துக்கும் தென்னிலங்கை அரசியலுக்கும் என்ன சம்பந்தம் என்றா கேட்கிறீர்கள்?

அந்தப் படமும் இரண்டு பெண்கள் பற்றியது. அது போல இதுவும் தென்னிலங்கையின் இரண்டு பெண் அரசியல்வாதிகள் பற்றியது. படத்திலும் சீதாவும், கீதாவும் போல தென்னிலங்கை அரசியல் சர்ச்சையிலும் கீதாவும், சீதாவும் தான்.

அதனால்தான் அந்தப் படத்தின் பெயரை வைத்தே இச்சர்ச்சை பற்றிப் பேசுகின்றன தென்னிலங்கை ஊடகங் கங்கள்.

சந்தர்ப்பவசமாக இந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருவரும் முன்னாள் நடிகை. மறையவர் இன்று நடிகை போன்று தோற்றமளிப்பவர்.

இருவருமே ஆளும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள்.

ஒருவர் - நடிகை கீதா குமாரசிங்க.

மற்றவர் - மருத்துவ சேர்ஜன் சீதா அரம்பேபொல.

ஜனாதிபதித் தேர்தலில் முதன் முதலில் மஹிந்த ராஜபக்ஷ குதித்த போது - 2005 இல் - சிங்களத் திரை உலகில் இருந்து அவரை ஆதரிப்பதற்காகத் துணிச்சலுடன் முதலில் களமிறங்கியவர் கீதா குமாரசிங்க. மஹிந்த ராஜபக்ஷவின் முழு ஆதரவாளர்.

2015 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் பொது எதிரணியில் மஹிந்த தரப்புடன் உறுதியாக நின்றவர். எனினும் இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான வழக்குக் காரணமாக தனது எம்.பி. பதவியை இடைநடுவில் இழந்த போதும் மஹிந்த அணியுடன் முழு மும்முரமாக நின்றவர்; நிற்பவர்.

சீதா அரம்பேபொல மருத்துவத்துறையில் ஒளிர்விட்ட சேர்ஜன். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தவர். தாம் ஜனாதிபதியானவுடன் இலங்கையின் தலைநகர் கொழும்பையும் உள்ளடக்கிய மேல் மாகாணத்துக்கு அவரை ஆளுநராக நியமித்தார் கோட்டாபய.

அதன் பின்பு கடந்த பொதுத் தேர்தலை அடுத்து தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாகக்கப்பட்ட அவருக்கு ராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது. அடுத்த அமைச்சரவை மாற்றத்தின்போது மேலும் உயர்வு அவருக்குக் கிட்டும் என நம்பப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மிக நெருக்கமானவர் அவர்.

கட்சிக்காக நீண்ட காலம் உழைத்த கீதா குமாரசிங்க - நல்லாட்சி அரசின் போதும் கூட்டு எதிரணியுடன் நின்று பிடித்தவர். அவர் இப்போதும் சாதாரண எம்.பிதான். கட்சிக்குள் புறம்தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஆனால் 2019 இற்குப் பிறகு பொது ஜன பெரமுனவுக்குள் நுழைந்து, தேசியப்பட்டியல் மூலம் எம்.பியான சீதாவுக்கு அமைச்சர் பதவி.

இந்த விவகாரத்தைத்தான் 'சீதா ஓர் கீதா' என்று சினிமாத் தலைப்புப் பாணியில் பேசுகின்றன தென்னிலங்கை சமூக ஊடகங்கள்.

★ ★ ★

முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் எனத் தெரிவித்து பஸில் ராஜபக்ஷவுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் தீர்ப்பு இன்று வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

நாட்டின் முழு அதிகாரமும் ராஜபக்ஷக்கள் வசம் வந்து விட்டமையினால் இந்த நீதிமன்ற விவகாரமும் சிக்கலாக இருக்காது என பஸில் ராஜபக்ஷ நிச்சயம் நம்பலாம்.

அதன் பின்னர் அவர் என்ன செய்யப் போகின்றார் என்பதுதான் கேள்வி.

வழக்கு சிக்கலின்றி முடிந்து விட்டால், பிரச்சினைகள் தீர்ந்தன, அப்பாடா என்று அவர் குடும்பத்தை தேடி அமெரிக்கா புறப்பட்டு விடுவார் என்கின்றன சில வட்டாரங்கள். இல்லை, நாடாளுமன்றுக்குள் உறுப்பினராகப் புகுந்து ஓர் அமைச்சையும் ஏற்பார் என்கின்றன வேறு சில வட்டாரங்கள்.

என்ன நடக்கின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமா?

– மின்னல் –

## கார்த்திகை தீபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதாகி விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக பண்பாட்டு வாயிலில் நேற்று மாலை 6 மணிக்கு தீபங்களை ஏற்றுவதற்கு மாணவர்கள் சிட்டிகளுடன் தயாராகினர்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் செல்லும் வாயில்கள் மூடப்பட்டிருந்தமையால் பரமேஸ்வரன் ஆலயத்தில் தீபம் ஏற்ற முடியாத நிலையில் மாணவர்கள் பண்பாட்டு வாயிலின் வெளியே தீபங்களை ஏற்ற முற்பட்டனர்.

அதனை அறிந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வந்து தீபங்கள் ஏற்றுவதற்கு அனுமதியில்லை என்று தெரிவித்தனர்.

மாணவர்களை அவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளில் தீபங்களை ஏற்றுமாறு பொலிஸார், மாணவர்களுக்கு அறிவுறுத்தினர்.

தமது அறிவுறுத்தலை மீறி தீபங்கள் ஏற்றினால் கைதுசெய்யப்படுவீர்கள் என்றும் பொலிஸார் எச்சரித்தனர்.

இந்தநிலையில், இரவு 7.45 மணியளவில் தீபம் ஏற்றிய விஞ்ஞானபீட மாணவன் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தகவல் அறிந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், வி.மணிவண்ணன் இருவரும் கைதான மாணவனை விடுவிக்கப் பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்தினர்.

மாணவனிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் அவரைப் பொலிஸார் விடுவித்தனர்.

இதேவேளை, "மாணவன் கைது விடயம் தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். இந்துக்களின் நிகழ்வை நடத்த முடியாது தடுத்ததுடன், மாணவனைக் கைதுசெய்தமை தவறு என்று சுட்டிக்காட்டினேன். மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் இன்று (நேற்று) இந்துக்களின் கார்த்திகை தீபத்திருநாள் என்றுதான் அறிந்திருக்கவில்லை என்றும், மாணவனை உடனடியாக விடுவிப்பதாகவும் உறுதியளித்தார்" – என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இதனிடையே, மாணவன் கைது பற்றி அறிந்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு மாணவனின் விடுதலையைத் தாம் வலியுறுத்தினார் என்று தெரிவித்தார்.

## இறுதி நேரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஜித் டோவல் கொழும்பை விட்டு நேற்று புறப்படுவதற்கு முன்னர் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்துக்கு சம்பந்தனை அழைத்து அவருடன் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டார்.

இந்தப் பேச்சுகள் இடம்பெற்றமையை சம்பந்தனும் உறுதிப்படுத்தினார். "இலங்கையின் அபிவிருத்தி, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி உட்படப் பல விடயங்கள் குறித்தும் பேசினோம்." – என்றார் அவர்.

இலங்கை – மாலைதீவு – இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான முத்தரப்பு பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வருகை தந்த தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் இலங்கை விஜய நிகழ்ச்சி நிரலை ஏற்கனவே இந்தியத் தரப்பு வெளியிட்டிருந்தது.

இலங்கைப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, இலங்கையின் பாதுகாப்புச் செயலர் ஆகியோருடனான சந்திப்புக் குறித்தெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சம்பந்தனுடனான சந்திப்பு முன்னர் குறித்தொதுக்கப்படவில்லை.

திடீரென – கடைசி நேரத்தில் – டோவல் புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் அது நடைபெற்றிருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எத்தனம், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி ஆகியவை குறித்தெல்லாம் இந்தப் பேச்சில் ஆராயப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

## வடக்கில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 186 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று செய்யப்பட்டன.

வெளிமாவட்டங்களிலிருந்து தொழில் நிமித்தம் வடக்குக்கு வந்தவர்களில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவரோடு சாரதியாகக் கடமையாற்றியவர் தனிமைப்படுத்தலில் இருந்த நிலையில் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது..

மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தென்பகுதியில் இருந்து வீதி திருத்த வேலைக்காக வந்திருந்த சமயம் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் நேற்றைய பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென் பகுதியிலிருந்து தொழில் நிமித்தம் முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு வந்திருந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த மூன்று பேர் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளார்கள்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளவின் உள்ளே வந்த இராணுவத்தினர் விளக்குகளைத் தூக்கி வீசியுள்ளனர்.

அதன் பின்னர் வயோதிபர் தம்பதியைத் துப்பாக்கியால் தாக்கவும் முயன்றுள்ளனர்.

பரந்தன் இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களே இராணுவச் சீருடையில் இவ்வாறு அச்சுறுத்தியமையுடன் தாக்க முற்பட்டனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சிவில் உடையில் இரண்டு இராணுவத்தினரும், சீருடையுடன் இரண்டு இராணுவத்தினரும் பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாகவுள்ள வீட்டுக்கு சென்று கார்த்திகைத் தீபங்களைத் தூக்கி வீசிவிட்டு அவற்றைக் காலால் மிதித்து வீட்டிலிருந்த பெண்களையும் அச்சுறுத்தி அவதூறான வார்த்தைகளால் பேசியுள்ளனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் பரந்தன் பகுதியில் குறித்த இராணுவத்தினரே ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியதுடன் ஒளிப்பதிவு செய்த காட்சிகளை அழித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (55)

## மஹர சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹர சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த நாள்களாக கைதிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று கைதிகள் பலர் சிறைச்சாலைக்குள் தீவைத்து சிறையின் பிரதான வாயிலை உடைத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சித்த போது சிறைக் காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 25 பேர் படுகாயமடைந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதிகளிடையே ஏற்பட்ட வன்முறை மோதல்களைத் தொடர்ந்து அங்கு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஆனால், நேற்று நள்ளிரவு வரை அங்கு அமைதியின்மை நிலவி வருகின்றது எனவும், சிறைக்குள் இருந்து அடிக்கடி துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று நள்ளிரவு வரை சிறைச்சாலைக்கு முன்னால் கைதிகளின் உறவினர்கள் கூடியுள்ளமையால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் கூறினர்.

சிறையில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த அங்கு தீயணைப்பு படையினரும், கடற்படையினரும் வரவழைக்கப்பட்டனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## நேற்றும் 496...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

484 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களில் 17 ஆயிரத்து 2 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 366 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 116 பேர் உயிரிழந்துள்ளனர்.

## நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு 02 ஐச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரும், கொதட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவரும், மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும், சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண் ஒருவரும், அக்குரெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்பு 13 ஐச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவரும் மற்றும் மருதானைப் பிரதேசத்தை சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116 ஆக அதிகரித்துள்ளது.

# பருத்தித்துறை பகுதியில் வாள்வெட்டுக் கும்பல் அட்டூழியம் 3 வீடுகள் சேதமாக்கப்பட்டன; வயோதிபருக்குப் படுகாயம்!

வடமராட்சி – பருத்தித்துறை பகுதியில் வாள்வெட்டுக் கும்பலின் அட்டூழியத்தில் இளைஞர் ஒருவர் காணமல் போயுள்ள நிலையில் 3 வீடுகள் அடித்துடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டும் முதியவர் படுகாயத்திற்குள்ளாகியும் உள்ளார்.

பருத்தித்துறை வல்லிபுரக்குறிச்சி சிங்கைநகர் பகுதியில் உள்ள குறித்த வீட்டாருக்கு சொந்தாமாக பிறிதொரு இடத்தில் இருக்கும் வயல் காணியில் ஒரு குழுவினர் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது குறித்து சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட தரப்பினரிடம் குறித்த காணி உரிமையாளர்கள் ஆட்சேபனை தெரிவித்து தொடர்ந்தும் மணல் அகழ்வில் ஈடுபடவேண்டாம் என வலியுறுத்தியிருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சட்டவிரோத மணல் அகழ்வு கும்பல் நேற்றுமுன்தினம் மாலை குறித்த வீட்டிற்கு வாள்களுடன் மிரட்டச் சென்றுள்ளனர். இதையடுத்து அந்த வீட்டார் பருத்தித்துறை பொலிஸில் மிரட்டல் சம்பவம் குறித்து, முறையிட்டனர் எனவும் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையினையும் பொலிஸார் உடனடியாக மேற்கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு அந்த வீட்டிற்குள் வாள்களுடன் நுழைந்த சட்டவிரோத மணல் அகழ்வு கும்பல் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள், தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை வாள்களால் கொத்தியும், உடைத்தும் சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வாள்களுடன் வந்து மிரட்டிய நிலையில் அச்சமடைந்த குறித்த வீட்டார் அயல் வீட்டில் சென்று இரவு தங்கியிருந்த நிலையில் அங்கும் அத்துமீறி உள்நுழைந்த வாள்வெட்டுக் கும்பல், அவர்களை தாக்க முற்பட்ட போது தடுக்க முற்பட்ட அந்த வீட்டைச் சேர்ந்த முதியவரை அவர்கள் தாக்கிப் படுகாயத்திற்குள்ளாக்கிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் சிங்கை நகர் வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த சின்னத்துரை துரைராசா (வயது – 68) என்ற முதியவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர குறித்த பகுதியில் உள்ள மற்றொரு வீட்டின் கதவையும் வாள்வெட்டுக் குழுவினர் கொத்தி சேதமாக்கிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் காணிக்கு சொந்தமான குடும்பத்தைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை – பிரதீபன் (வயது – 24) என்ற இளைஞனை நேற்று மாலை முதல் காணவில்லை என குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை குடி தண்ணீர் எடுப்பதற்காக மோட்டார்சைக்கிளில் சென்ற அவர் காணாமல் போயுள்ள நிலையில், நேற்று வடமராட்சி முராவில் பகுதியில் இருந்து அவர் சென்ற மோட்டார் சைக்கிள் சேதமாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

# கோட்டா, மஹிந்தவின் மின்சார 'ஷொக்' விரைவில் எதிர்க் கட்சியைத் தாக்கும்!

## அமைச்சர் மஹிந்தானந்த வெருட்டல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும், பிரதமர் மஹிந்தராஜபக்ஷவினதும்மின்சாரபாய்ச்சல் இன்னமும் எதிர்க்கட்சிக்கு சரியாக சென்றடையவில்லை. இன்னமும் எமது மின்சார 'ஷொக்' எதிர்கட்சிக்கு அடிக்கவில்லை. ஆனால்வெகு விரைவில் மின்சாரதாக்கம் என்னவென்று விளங்கும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் மின்சார பாய்ச்சல் இன்னமும் எதிர்க்கட்சிக்கு சரியாக சென்றடையவில்லை.

இன்னமும் எமது மின்சார ஷொக் எதிர்கட்சிக்கு அடிக்கவில்லை, அதனால் தான் எம்மைப் பற்றித் தெரியாது விமர்சித்துக்கொண்டுள்ளீர்கள்.

இன்னும் சில நாள்களில் இந்த மின்சார ஷொக் அடித்ததும் உங்களின் வாய்கள் தானாக மூடும். அப்போது எம்மைப்பற்றித் தெரியும்.

முன்னைய ஆட்சியில் அரச திணைக்களங்கள் அனைத்துமே நட்டத்தில் இயங்கின, ஆனால் நாம் மீண்டும் அமைச்சுக்களையும், திணைக்களங்களையும் மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இப்போதே இலாபமடைய ஆரம்பித்துள்ளன. கோடி கணக்கில் களவு செய்து நட்டத்திற்கு கொண்டு சென்ற அமைச்சுக்களைப் பற்றிப் பேச எதிர்க்கட்சிக்கு எந்தத் தகுதியும் இல்லை.

இந்த ஆட்சி முடிய முன்னர் நாட்டில் சகல வீட்டுக்கும் மின்சாரம் கிடைக்கும். பாதைகள் திருத்தப்படும். தொழிற்சாலைகள் திறக்கப்படும். மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை எமது அரசாங்கம் காப்பாற்றும். புதிய முயற்சிகள் உருவாக்கப்படும். இவற்றை நீங்கள்



பார்ப்பீர்கள். 2024 ஆம் ஆண்டு நாட்டில் சகல மக்களுக்கும் நீர், மின், வீதி அபிவிருத்திகளை முழுமையாகக் கிடைக்கும்.

அதேபோல் எல்.பி.எல் கிரிக்கெட் போட்டிகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ள நிதி தொடர்பாக எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினீர்கள். ஆனால் இந்த கிரிக்கெட் போட்டிகளை நடத்த அரசாங்கம் எந்தவோர் அரச நிதியையும் ஒதுக்கவில்லை, இந்தப் போட்டிகளை நடத்தும் தனியார் நிறுவனங்களே போட்டிகளுக்கான நிதி உதவிகளைச் செய்துள்ளன. – என்றார்.

# ஹெரோயினுடன் ஒருவர் பேலியகொடவில் கைது!

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமொன்றுக்கு அருகில் நேற்று சனிக்கிழமை பேலியகொட குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

வத்தளையைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவரிடமிருந்து 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஏறாவூரில் 13 பேர் கைது

முகக்கவசம் அணியாது வீதியில் பயணம் செய்த 13 பேர் மட்டக்களப்பு,ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளதனால் கிழக்கு மாகாணத்திலும் நூற்றுக்கணக்கானோருக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# நாட்டில் மின் உற்பத்தியை அதிகரிக்க முறையான வேலைத்திட்டம் உருவாக்கம்!

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

முதலீட்டாளர்களின் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தை வழங்க முடியாவிட்டால் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் தொடர்பில் நம்பிக்கை இல்லாமல் போகும். அதனால் மின் உற்பத்தியில் திருப்புமுனையை ஏற்படுத்தும்வகையில் புதுப்பிக்கத்தக்க சக்திகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என மின்சக்தி அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் அபிவிருத்திக்கு மின்சாரம் முக்கியமாகும். என்றாலும் மின் உற்பத்திக்காக பாரியளவில் நிதி செலவிடப்படுகின்றது. செலவிடப்படும் நிதிக்கேற்ற லாபம் கிடைப்பதில்லை. அதனால் வரலாற்றில் எப்போதும் மின்சாரசபை நட்டத்திலேயே செல்கின்றது. அதனால் மின்சார உற்பத்தியை லாபமீட்டும் வகையில் செயற்படுத்த புதுப்பிக்கத்தக்க சக்திகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக வரவு செலவு திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் நாட்டின் மின்சாரத்தின் கேள்விகளை பார்க்கும்போது அன்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது நுரைச்சோலை அனல் மின் உற்பத்தியை ஆரம்பித்திருக்காவிட்டால் இன்னும் பாரிய மின்சக்தி பிரச்சினை ஏற்பட்டிருக்கும்.

அதனால் எதிர்காலத்தில் மின்சார பிரச்சினை ஏற்படாதவகையில் புதுப்பிக்க சக்திகளினூடாக மின் உற்பதியை மேற்கொண்டு தேசிய மின் கட்டமைப்புடன் சேர்க்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அதன் பிரகாரம் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திக்கான ஆரம்ப நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதேபோன்று இன்னும் இரண்டுவாரங்களில் திரவ இயற்கை எரிவாயு கெரவலப்பிடியவில் ஆரம்பிக்கப்படுகின்றது. சூரிய ஒளி ஊடாக மின்சாரத்தை உற்பத்திசெய்யவும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் நாட்டின் மின் கட்டணம் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும் மின் அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்காக 23.87ரூபா செலவிடப்படுகின்றது. ஆனால் ஓர் அலகு மின் 16.67ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகின்றது. நுகர்வோரிடமிருந்து ஒன்று முதல் 30 வரை அலகுக்கு 3.50 ரூபாவே அறவிடப்படுகின்றது.

மேலும் நாட்டுக்கு வரக்கூடிய முதலீட்டாளர்களின் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தை குறைத்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் முதலீட்டாளர்களின் வருகை இல்லாமல் போகும் அபாயம் இருக்கின்றது. அதுதொடர்பில் சிந்தித்தே புதுப்பிக்கத்தக்க சக்திகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம். என்றார்

# தம்புள்ள கல்வி வலய பாடசாலைகளுக்கு பூட்டு!

தம்புள்ள கல்வி வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அந்தப் பாடசாலைகளை இன்று (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒரு வாரத்திற்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சம் அதிகரித்து வருவதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் பெரும்பாலானோருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பரிசோதனை முடிவுகள் வெளியானதிலேயே வர்த்தகர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மைத் தோழன் யார்? நயவஞ்சக நண்பன் யார்?

இலங்கை – இந்திய உறவுகள் விடயத்தில் இலங்கைத் தமிழர்களின் ஆதங்கம் ஒன்றே ஒன்றுதான். அதனை இப்பத்தியில் திரும்பத் திரும்ப பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம்.

அது – இந்தப் பிராந்தியத்தில் – குறிப்பாக இலங்கையில் – பல தரப்புகள் இருந்தாலும் தன்னுடைய உண்மையான நண்பர் யார், தோழனாக நடிக்கும் நயவஞ்சக நண்பன் யார் என்பதை அடையாளம் காண்பதில் – இந்திரா காந்திக்குப் பின்னர் வந்த இந்தியத் தலைமைகள் தொடர்ந்து தவறிழைத்து வருகின்றன என்பதுதான்.

1962களில் இந்திய – சீன யுத்தம் வெடித்தபோது அந்த யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இந்திய ஜவான்களுக்கு உதவுவதற்காக தந்தை செல்வா தலைமையிலான தமிழர்கள் வீதிகள், வீதிகளாக, வீடுகள், வீடுகளாக தொப்பி ஏந்தி நிதி திரட்டினர். தானாடா விட்டாலும் தசை ஆடும் என்பது போல – தங்கள் தொப்புள் கொடி உறவுகளுக்காக – இந்தியச் சகோதரர்களுக்காக – தங்கள் உணர்வெழுச்சியைக் காட்டினர் ஈழத் தமிழர்கள்.

ஆனால், கிழக்குப் பாகிஸ்தானை விடுவிடுத்து, வங்க தேசமாக அதனை உருவாக்குவதற்காக 1971 இல் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் ஊடுருவி இந்தியா போர் தொடுத்த போது என்ன நடந்தது?

பாகிஸ்தான் (மேற்குப் பாகிஸ்தான்) அரசு தனது அங்கமாக தனித்திருந்த கிழக்குப் பாகிஸ்தானுக்கு தனது யுத்த விமானங்களையும் பிற வான்கலங்களையும் இந்திய பிராந்தியத்துக்கு மேலாகக் கொண்டு செல்லமுடியாத நிலைமை ஏற்பட்ட போது பாகிஸ்தான் விமானங்கள் மேற்கிலிருந்து கிழக்குக்கு இந்தியாவைச் சுற்றிப் பறந்து செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படி வரும் விமானங்கள் கொழும்பில் தரித்து எரிபொருள் நிரப்பிச் செல்லும் வசதி வாய்ப்பை இலங்கை வழங்கியது.

இந்தியா இரண்டு யுத்தங்களை எதிர்கொண்டபோது இலங்கையில் உள்ள தரப்புகள் எப்படி நடந்து கொண்டன என்ற விடயம் இலங்கையில் இந்தியாவுக்கு உண்மையான நண்பன் யார், நயவஞ்சகத் தோழன் யார் என்பதை அடையாளம் காட்டும் நிகழ்வுகளாகும்.

ஆனால், புதுடில்லியில் அதிகாரத்துக்கு வந்த தரப்புகள், இராஜதந்திரிகள் இதனைக் கவனத்தில் எடுப்பவர்களாக இல்லை.

அவர்கள் எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழர், தாயகப் பிரதேசத்தில் இந்தியப் படைகளுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின் அடிப்படையிலேயே தீர்மானங்களை எடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள்.

இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்தது என்னவோ ‘இந்திய அமைதி காக்கும் படை’ என்ற பெயரில்தான். ஆனால் அதற்கான உடன்பாட்டை இந்திய அரசு செய்து கொண்டது இலங்கை அரசுடனேயே தவிர, இந்தப் பிணக்கில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தமிழர் தரப்புடனோ அல்லது விடுதலைப் புலிகளுடனோ அல்ல. இலங்கைத் தரப்புடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம், இலங்கை அரசுக்குத்தான் அது ‘அமைதி காக்கும் படையே’ தவிர தமிழருக்கோ, தமக்கோ அல்ல என்று விடுதலைப் புலிகள் கருதினர். அதனால் அதனைத் தமது தாயகம் மீதான அந்நிய ஆக்கிரமிப்பாகக் கருதி இலங்கைப் படைகளுடன் போர் தொடுத்த மாதிரி, இந்தியப் படைகளுடனும் அவர்கள் போர் தொடுத்தனர்.

இந்த விடயத்தை வைத்துக் கொண்டு – அல்லது அந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தை அடுத்து, இந்திய மண்ணில் நடைபெற்ற சம்பவங்களை வைத்துக் கொண்டு – தீர்மானங்களை புதுடில்லி மேற்கொள்வது தவறு.

இந்தியா தொடர்பில் இலங்கையின் உண்மையான கருத்து நிலைப்பாடு யாது என்பதை கோட்டாபய ராஜபக்ஷ அரசின் முக்கிய பிரமுகரான அமைச்சர் உதய கம்மன் பில்ல தெரிவித்திருக்கின்றார். அதுவும் இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசரான அஜித் டோவால், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கொழும்பில் மூடிய அறைக்குள் பேசிக் கொண்டிருக்கும் கால சமயத்தில் நாடாளுமன்றத்தில் அந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

*“இலங்கையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் இடை நடுவில கைவிடும் இந்தியா போன்ற நாடுகளைத் தொடர்ந்தும் நம்பி அவர்களில் தங்கியிருக்காது இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நாடுகளுடனும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவோம்”* – என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார் அவர்.

இலங்கை அரசின் சீனச்சார்பு கொள்கைப் போக்கை இப்படி வேறு வார்த்தைகளில் தெளிவாக – திட்டவட்டமாக – முன்வைக்கின்றார் அவர்.

இதற்குப் பின்னும் புதுடில்லி தெளிவு பெறாவிட்டால், நயவஞ்சகத் தோழனின் சகவாசம் நட்டாற்றில் அந்தரிக்க விட்டுச் செல்லும் போதுதான் அது தெளிவுபெற வேண்டி நேரும்.

## கிராமங்களின் முன்மொழிவுக்கே இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் முன்னுரிமை

### பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்



வரவு – செலவுத் திட்டத்தை செயற்படுத்தும் போது கிராமியக் குழுக்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்கி மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பஸில் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு–

இம்முறை மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், கிராமத்திலுள்ள சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிற அமைப்புகளின் பங்களிப்புடன், கிராமியக் குழுக்களுக்கு முன்வைக்கப்படும் கிராம மக்களின் முன்மொழிவுகளை மேலும் முறையாக ஆய்வு செய்து, அதனை முன்னுரிமை அளிப்பதனையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் கிராமிய உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கு மேலும் ரூபா 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் தொழில் முனைவோரை உருவாக்கி அவர்களது உற்பத்திகளை விநியோகிப்பதற்கு கிராமிய மட்டத்தில் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அனைத்து கிராமங்களுக்கும் சென்று கிராம மக்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அவர்களின் பங்கேற்புடன் ‘வேலைத் திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு’ செயல் திட்டத்தை செயற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்த வரவு – செலவுத் திட்டம் உண்மையான இலங்கையின் அடையாளம், கலாசாரம் மற்றும் உள்ளூர் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட வரவு – செலவுத் திட்டம். அதற்கு மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் தலையிடுமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு அமைச்சுக்களுக்கிடையேயும் முறைகள் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். அதேபோன்று கிராம மட்டத்திலும் பல்வேறு கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏற்படக்கூடும்.

அதனால் கிராமத்தின் பிரதான குழுக்கள் ஊடாக முன்னுரிமையளித்து, பிரதேச அபிவிருத்தி குழுக்களில் அங்கீகரித்து வரவு செலவுத் திட்டத்தை செயற் படுத்த வேண்டும். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இன்னும் திறம்பட மேற்கொள்ள முடியும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை ஆரம்பிப்பு!





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் நோயாளர் பராமரிப்புச் சேவை அலுவலகத்தை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய வைத்தியர் விமலசேன, நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன், வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ஜெயபாலன் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

கொரோனா பாதிப்பால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மார்ச் மாதம் நோயாளர் பராமரிப்புச் சேவை, வைத்தியசாலை வாகன பாதுகாப்பு நிலையம் என்பன தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன. இதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நோயாளர் பராமரிப்புச் சேவை மற்றும் வாகன பாதுகாப்பு நிலையம் என்பன நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் வைத்தியசாலை சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

16
2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
பெண்ணுக்கு வன்முறை செய்தால்
நம் கண்களே இருண்டு போகும்
மாதரை மதிக்கும் மதியினைப்பெற்றே
மாண்புடன் வாழ்ந்திடுவோம்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
‘இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.’
– மிகைல் கோபர்ச்சேவ்
(சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர்)

# மயிலத்தமடுவில் தினமும் பறிபோகும் காணிகள்: கண்ணீருடன் வெளியேறும் பண்ணையாளர்கள்!

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதியான ஏறா வூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயிலத் மடு, மாதவனை பிரதேசம் நாளுக்கு நாள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மைச் சமூகத்தி னரால் அபகரிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி கால்நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதாவது, தற்போது ஐயாயிரம் ஏக்கர்கள் வரை அபகரிக்கப்பட்டு, அங்கிருக்கும் பண்ணையாளர்கள் விரட்டியடிக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஆராய் வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட பிரதிநிதிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பகுதிக்கு விஜயம் செய்து, பண்ணையாளர்களுடன் கலந்து ரையாடியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பண்ணையாளர் கள், மேய்ச்சல் தரைக்கு என ஒதுக்கப்பட்ட மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் பல காலமாகத் தாங்கள் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர் எனவும், சில காலமாக பொலன்நறுவையில் இருந்துவரும் பெரும் பான்மையினத்தைச் சேர்ந்தவர்களால் தாங்கள் தொடர்ச் சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.



அத்துடன் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதிக்கு வந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வர்கள், இந்தப் பகுதிகளில் காணிகளை அபகரித்து பயிர்ச்செய்கை முன்னெடுத்துவந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு முன்னாள் அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த வர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்று, குறித்த அத்துமீறல்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன எனவும் அப்பகுதி கால்நடை வளர்ப்பாளர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

எனினும் தற்போது மீண்டும் பொலன்நறுவையில் இருந்துவரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் காணிகளை அபகரிப்பதுடன், அப்பகுதி தங்களின் நிலம் என்றும் மாடுகளை அப்பகுதியில் மேயவிடவேண் டாம் எனவும் மாடுகளை அங்கிருந்து கொண்டுசெல் லுமாறும் அச்சுறுத்தல் விடுக்கின்றனர் எனவும் அவை தொடர்பில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் முதல் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரிடம் முறையிட்டும் எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாமையால் பரம் பரை, பரம்பரையாகப் பாதுகாத்து, பாராமரித்து வந்த காணிகளை விட்டு தற்போது நாம் வெளியேறி வருகின் றனர் எனவும் கண்ணீருடன் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன இந்திர குமார், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் தலைவர் கி.சேயோன், மாநகர சபை உறுப்பினர் துரைசிங்கம் மதன், ஏறாவூர்பற்று பிரதேச சபையின் உறுப்பினர்களான முரளிதரன், வேல் பரம தேவா மற்றும் பண்ணையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# முல்லைத்தீவு குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்தது!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்க ளான முத்தையன் கட்டுக்குளம் வவுனிக்குளம் உள் ளிட்ட குளங்களின் நீர் மட்டங்கள் அரைவாசிக்கும் குறைவாகவே காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெளியிட்ட தகவல் களின் படி முத்தையன் கட்டு நீர்ப்பாசனத் திணைக் களத்தின் கீழுள்ள –

முத்தையன் குளத்தின் நீர் மட்டம் – 09 அடி05 அங்குலம்.

கனுகேணிக்குளத்தின் நீர் மட்டம் –12 அடி.

உடையார்கட்டுக்குளத்தின் நீர் மட்டம் – 10அடி 01 அங்குலம்.

தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் – 15அடி 03 அங்குலம்.

மடவாளசிங்கம் குளத்தின் நீர் மட்டம் – 10அடி01 அங்குலம்.

விசுவமடுக்குளததின் நீர் மட்டம் – 09அடி 09 அங்குலம்.

மருதமடுக்குளத்தின் நீர் மட்டம் – 07 அடி 03 அங்குலம்.

தட்டையமலை குளத்தின் நீர் மட்டம் – 09அடி அங் குலமாகவும் காணப்படுகின்றன.

இதேபோன்று வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத் தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் நீர்மட்டம் – 10 அடியாகவும் தென்னியன் குளம், அம்பாலப் பெருமாள் குளம், கல் விளான் குளம், கோட்டைகட்டியகுளம், கொல்லவிளாங் குளம், மல்லாவிக்குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் – 04 அடியாகவும், ஐயன்கன் குளம் பழைய முறி கண்டி குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் – 05 அடியாகவும் மரு தன் குளம், பனங்காமம் குளம் ஆகியவற்றின் நீர் மட் டம்03 அடியாகவும், தேறாங்கண்டல் குளத்தின் நீர்மட்டம் – 06 அடியாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# தடைகளைத் தகர்த்து வெற்றியை நோக்கி பயணிப்பதே எமது இலக்கு!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி

தீர்வுகளை அடைவதற்கான தடைகளை உடைத்தெறிந்து வெற்றியை நோக்கிப் பயணிப்பதே எமது உறுதியான கொள்கை என இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை – டெரிக்கிளயார் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் ஜீவன் தொண் டமான் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மலையகத்திலுள்ள அரசியல் வாதியொருவர் வானொலியொன் றுக்கு நேர்காணல் வழங்கியிருந் தார்.

அதில்ஆயிரம் ரூபா கிடைக் குமா என கேட்டனர். கிடைக்காது



என்றார். பல்கலைக்கழகம் பற்றி யும் வினா எழுப்பப்பட்டது. அதற் கும் வராது என பதிலளித்துள்ளார். மலையக மக்களுக்காக வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு இடம்பெறவில்லை எனவும் விமர் சித்துள்ளார்.

அதாவது கிடைக்காது, முடியாது எனக் குறைகளை மட்டும் கூறிக் கொண்டிருப்பது தலைமைத்துவப் பண்பு கிடையாது. தீர்வுகளை அடை வதற்காகத் தடையாக உள்ள கார ணிகளை உடைத்தெறியவேண் டும். அதனை எவ்வாறு செய்ய வேண்டும் எனத் திட்டம் வகுக்க வேண்டும். இதனை எம்மால் நிச்சயம் செய்யமுடியும். அரசிய லுக்கு அப்பால் சிறந்த நிர்வாகி யாகச் செயற்படுவதையே நான் விரும்புகின்றேன்.

மலையக மக்களும் இலங்கை யர்களே, அபிவிருத்தித் திட்டங்க ளுக்காக வரவு – செலவுத் திட்டத் தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி அவர் களுக்கும் உரித்துடையது.

மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டம் என்பது முழு நாட் டுக்குமானது. அதில் ஒவ்வொரு பிரிவுகளுக்கான ஒதுக்கீடுகள் இருக்காது என்பதை புரிந்து கொள்ளவேண்டும். பல்கலைக் கழகம் அமைப்பதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கேரளக் கஞ்சாவுடன் கல்கிசையில் ஒருவர் கைது!

கல்கிசை பகுதியில் இரண்டு கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கல்கிசை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ரத்மலானை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார்.

இவரிடமிருந்து 2 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் தொடர்பான மேல திக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# யாழ். ஆஸ்பத்திரி பி.சி.ஆர். சான்றிதழை விமான நிலையத்தில் ஏற்பதற்கு மறுப்பு!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளும் பி.சி.ஆர். பரி சோதனையின் பெறுபேறு செல்லாது என் றும், கொழும்பு நவலோகாவில் புதிய பரி சோதனை மேற்கொண்டு வருமாறும் விமான நிலையத்தில் பயணிகள் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்து நின்றவர் கள் உட்பட வெளிநாடுகளிற்கு பயணிப்பவர் கள் அனைவரும் விமானம் ஏறுவதற்கு முன்பு 72 மணித்தியாளங்களிற்கு உட்பட்ட நேரத்தில் பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை சான்றிதழ் சமர்ப்பித்தே விமானத்தில் பயணிக்கும் நடைமுறை பின்பற்றப்படு கின்றது.

இந்த நடைமுறைக்கு அமைய ஆரம் பத்தில் வடக்கில் இருந்து பயணிப்பவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட சான்றிதழுடன் சென்ற நேரம் விமான நிலை யத்தில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் சோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்தல் சகிதம் செல்பவர்களுக்கு விமான நிலையத்தில் அனுமதி மறுக்கப் படுகின்றது.

அவர்கள் கொழும்பில் உள்ள நவலோகா வைத்தியசாலையில் பரிசோதனை மேற் கொண்டு அந்தச் சான்றிதழை பெற்று வரு மாறு பணிக்கப்படுகின்றனர். இதற்கமைய நவலோகா வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனை மேற்கொண்டால் அங்கு ஒரு வருக்கு 9 ஆயிரம் ரூபா பணம் அறவிடப் படுகின்றது.

# பாகிஸ்தான் பிரஜை ஒருவர் மஹர சிறைச்சாலையில் சாவு!

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான்நாட்டைச்சேர்ந்த கைதியொருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.

இந்தக் கைதி நீண்டகால மாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலை யில் ராகமவில் அமைந்துள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார் என சிறைச்சாலை ஆணையாளர் துசார உபுல் தெனிய தெரிவித் துள்ளார்.

அதன்படி 45 வயதான பாகிஸ்தான் பிரஜை சிறுநீரக செயலிழப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மஹர சிறைச்சாலையிலி ருந்து ஒரு வார காலத்திற்குள் பதிவான இரண்டாவது உயிரிழப்பு சம்பவம் இது வாகும்.

மஹர சிறைச்சாலையில் கொரோனா தொற்றுக்குள் ளான 82 வயதான கைதியொ ருவர் கடந்த திங்கட்கிழமை வெலிகட சிறைச்சாலை வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரி ழந்தமையும் குறிப்பிடத் தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தற்காலிகமாகக் கைவிடப்படுகின்றது மருதங்கேணி கொவிட் வைத்தியசாலை

## மழை ஏற்படுத்திய நெருக்கடியால்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மருதங்கேணி கொவிட் வைத்தியசாலையின் கழிப்பறைகள் சேதமடைந்தமையோடு மழை நீரினாலும் வைத்தியசாலை சேதமடைந்தமையினால் அது தற்காலிகமாகக் கைவிடப்படுகின்றது.

வைத்தியசாலையின் கூரை மழை நீர் சிந்துவதோடு அங்கே காணப்படும் அனைத்து கழிப்பறைகளும் நிறைந்து வழியும் நிலைமையும் காணப்பட்டது. இதனால் வேறு மார்க்கம் இன்றி வைத்தியசாலை தற்காலிகமாக கை விடப்பட்டது.

இவ்வாறு கைவிடப்படும் மருதங்கேணி வைத்தியசாலையில் இருந்த 19 நோயாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஷ்ணபுரம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேநேரம் மருதங்கேணி வைத்தியசாலையின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு அவை அனைத்தும் சீர் செய்யப்பட்டதும் வைத்தியசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் நேற்று முதல் கொவிட் சிகிச்சை வைத்தியசாலை ஆரம்பம்





கிளிநொச்சி, நவ.30

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வட மாகாண தொற்று நோய் வைத்தியசாலையில் நேற்று முதல் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி வைத்தியசாலையிருந்து அனுப்பப்பட்ட தொற்றாளர்களும், அத்தோடு மேலும் ஒரு தொகை நோயாளிகளுமாக 40 பேர் நேற்று அனுமதிக்கப்படவிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ் மருதங்கேணி வைத்தியசாலையில் இடம்பெற்று வந்த கொரோனா சிகிச்சைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு மழைக்காலத்தில் மலசல கூட வசதிகளில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமா. அது தற்காலிகமாக மூடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். 200 பேர் சிகிச்சை பெறும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணபுரம் வைத்தியசாலையில் முதற்கட்டமாக இன்று 40 பேர் அனுமதிக்கப்படவுள்ளனர். இந்த வைத்தியசாலை வட மாகாணத்திற்கான தொற்று நோயியல் வைத்தியசாலையாக இயங்கவுள்ளது.

# இந்தியாவுக்கு மஞ்சளை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை!

சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட மஞ்சள் அடங்கிய கொள்கலன்களை மீள இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்க பணிப்பாளருமான சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

சுங்க திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 62 மஞ்சள் அடங்கிய கொள்கலன்களை, மீள இந்தியாவுக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தியாவிலிமிருந்து அபராதத் தொகையை அறவிட்டு, அதனை இந்தியாவுக்கே மீள் ஏற்றுமதி செய்யவுள்ளோம்.

மேலும், கைப்பற்றப்பட்டுள்ள கொள்கலன்களில் 10 லட்சம் கிலோ கிராம் மஞ்சள் காணப்படுகின்றது.

அத்துடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்டு, அரசுடமையாக்கப்பட்டுள்ள 30 தொன் மஞ்சளில் 10 தொன், ஆயுர்வேத உற்பத்தி கூட்டுதாபனத்தின் கோரிக்கைக்கமைய, நிதி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா பாதிப்பு எண்ணிக்கை கைதிகளில் ஆயிரத்தைக் கடந்தது!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை 1000 ஐக் கடந்துள்ளது.

மேலும் 187 சிறைக் கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உறுதி செய்யப்பட்ட நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 91 ஆக அதிகரித்துள்ளது.

# தீவக வலயப் பாடசாலைகள் இன்று வழமைபோல் இயங்கும்!

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

தீவக வலய பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை வழமை போல் இயங்கும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் மற்றும் வேலணை பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று இனக்காணப்பட்டுள்ள நிலையில் தொற்றுக்கு உள்ளானவர்கள் சமூக மட்டத்தில் நடமாடினர் எனத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தொற்றுக்கு உள்ளான வருடன் நேரடியாகத் தொடர்புபட்ட பல குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் காரைநகர் மற்றும் வேலணை பகுதியில் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இன்று தீவக வலய பாடசாலைகள் வழமை போல் இயங்கும் எனவும், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான விசேட கூட்டம் இன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன், அந்த கூட்டத்தின் முடிவில் அதற்குரிய முடிவு எட்டப்படும் எனவும் செயலாளர் தெரிவித்தார்.

# சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களை பொது இடத்துக்கு அழைத்து பி.சி.ஆர். சோதனை!

## மக்கள் விசனம்

சுயதனிமைப்படுத்தலில் இருந்த மக்களை பொது இடத்துக்கு அழைத்து, பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தியமை தொடர்பாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார சேவை பணிமனையினரால் இந்தப் பரிசோதனை நேற்று (சனிக்கிழமை) மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சியில் போத்தல் நீர் விநியோகஸ்தர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், சுய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களுக்கே நேற்று மாதிரிகள் பெறப்பட்டன.

முறிகண்டி, செல்வபுரம் பகுதிகளில் வர்த்தக நிலையங்களை நடத்தி வந்த வர்த்தகர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், மாதிரிகள் பெறப்பட்டன.

இவர்களை முறிகண்டியிலுள்ள வசந்த நகர் பொதுநோக்கு மண்டபத்துக்கு அழைத்து மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு, சுகாதார தரப்பினர் மாதிரிகளை பெற்று வந்த நிலையில் இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ்வாறு அழைக்கப்பட்ட வர்த்தகர்கள், 2 மணிநேரங்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தரித்து நின்றுள்ள நிலையில் ஒவ்வொருவராக அழைத்து மாதிரிகள் பெறப்பட்டன.

மேற்படி சம்பவம் தொடர்பாக, வருகை தந்திருந்த மருத்துவ குழுவில் பிரதேசத்துக்கு பொறுப்பாக இருந்த சுகாதார பரிசோதகரிடம் வினவியபோது, இவர்களிடமிருந்து தனித்தனியாக மாதிரிகளை பெறுவதற்கு வாகனம் இல்லை எனத் தெரிவித்தார்.

இவர்கள் இரண்டாம் நிலையிலுள்ள தொற்று சந்தேகநபர்கள் எனவும், கிளிநொச்சி நீர் விநியோகத்தில் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் எனத் தெரிவித்த அவர், இவர்கள் ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குச் சென்று மாதிரிகளை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவர்களின் இலகுபடுத்தலிற்காகவே அருகில் உள்ள பகுதி தெரிவு செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேலியகொட மீன்சந்தையை மீளத் திறக்க நடவடிக்கை!

பேலியகொடை மீன் சந்தையை மீள திறப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொடை மீன் சந்தையை விரைவாக மீளத் திறக்கும் முகமாக, சுகாதாரத் துறையினரால் அங்கு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

சுகாதார துறையினரால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீன் விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.


சுகாதார அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் பேலியகொடை மீன் சந்தை மீள திறக்கப்படும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், மொத்த விற்பனையாளர்கள் மாத்திரம் செல்வதற்கே அனுமதி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் கொரோனாவின் இரண்டாவது அலை மினுவங்கொடை மற்றும் பேலியகொடயில் இருந்து ஆரம்பமானது. இதனால், இந்த இரண்டு இடங்களில் இருந்து மட்டும் இதுவரை 18 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

எனினும், குறித்த பகுதிகளில் தற்போது வைரஸ் தாக்கம் குறைவடைந்துள்ளமையால் இவற்றை மீளவும் திறக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் தபால் விநியோகிக்கத் தீர்மானம்!



தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடிதங்களை விநியோகிக்கத் தயாராக உள்ளதாக தபால் திணைக்கள பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

மேற்படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரச, தனியார் நிறுவனங்கள் தபால் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் இதனை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் முடக்கப்பட்டுள்ள தபால் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகளுக்கு வெளிநாட்டில் நிதி சேகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை!

## என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, நவ.30

விடுதலைப் புலிகளிற்கு வெளிநாடுகளில் நிதி சேகரிப்பவர்களை கண்டுபிடித்து நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக இன்டர்போல் மற்றும் சி.ஐ.டி. மற்றும் புலனாய்வு பிரிவினரின் உதவிகளைப் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு பலர் நிதி சேகரிக்கின்றனர் என்றும் இது சட்டவிரோதமானது என்பதால் நாங்கள் இன்டர்போலின் உதவியை நாடவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



முன்னைய அரசாங்கம் இவர்கள் குறித்து தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை என்பதால் இந்த வலையமைப்பு விரிவடைந்துள்ளது எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## ஒரு லட்சம் வேலை வாய்ப்புகள்:

# முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் முதற்கட்டப் பயிற்சிகள் நிறைவு!







ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டவர்களுக்கான நிறைவு விழாக்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.

இதன்படி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நிறைவு விழாக்கள் அந்தந்த மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன.

### முல்லைத்தீவு மாவட்டம்

இதன்படி, முல்லைத்தீவில் வட்டுவாகல் பகுதியில் இளைஞர் படையணி அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, மாவட்ட அரச அதிபர், இளைஞர் படையணி நிலையப் பொறுப்பதிகாரி, வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற்கட்டமாக தொழிலுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்ட 54 பயனாளிகள் கலந்துகொண்டனர். இவர்களில் தன்னார்வத்துடன் இரத்த தானம் செய்வதற்கு முன்வந்த பலரும் இரத்தம் தானம் செய்தமையுடன் கலை நிகழ்வுக்ளும் இடம்பெற்றன.

### வவுனியா மாவட்டம்

இதேவேளை, ஒருலட்சம் வேலைவாய்ப்பில் தெரிவான வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 108 பேருக்கான பயிற்சியும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறைவு நிகழ்வு, வவுனியா, ஈரப்பெரியகுளம் தேசிய இளைஞர் படையணி அலுவலகத்தில் நடைபெற்றது.

14 நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சி நேற்றோடு நிறைவடைந்ததோடு, பயிற்சியில் பங்குபற்றிய அனைவரும் இரத்ததானமும் மேற்கொண்டுதமது கடமையை ஆரம்பித்தனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர், வைத்திய அதிகாரி, பல்நோக்கு அபிவிருத்தி செயலணி, வவுனியா மாவட்ட பிரதான பயிற்றுவிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### மன்னார் மாவட்டம்

மேலும், மன்னார் மாவட்டத்திலும் ஒரு லட்சம் வேலைத் திட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, மன்னார் மாவட்டத்தில் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 42 இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி கடந்த இரண்டு வாரங்கள் மன்னார் இளைஞர் படையணி முகாமில் இடம்பெற்றது.

இந்நிலையில், குறித்த பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்று மன்னார் இளைஞர் படையணி முகாமில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 834 பேர் தெரிவுசெய்யப்பட்டு முதற்கட்டமாக 42 பேர் இந்த இரண்டு வார தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆறு மாதப் பயிற்சியில் தற்போது இரண்டு வார பயிற்சி மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள சில பகுதிகள் இன்று விடுவிப்பு!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகளை இன்று (திங்கட்கிழமை) விடுவிக்கப்படஉள்ளன என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொழும்பு மாவட்டத்தில் புறக்கோட்டை, ஆட்டுப்பட்டித் தெரு, மட்டக்குளிய ஆகிய பகுதிகளும் கம்பஹா மாவட்டத்தில் ராகம மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளும் நாளை அதிகாலை 5 மணிக்கு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன.

இதேவேளை, வெல்லம்பிடிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, லக்சந்த செவன உத்தேச வீடமைப்பு திட்டம், சாலமுல்ல மற்றும் விஜயபுர கிராம அலுவலகர் பிரிவுகள் ஆகியன நாளை 5 மணி தொடக்கம் மீள் அறிவித்தல் வரை தனிமைப்படுத் தப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளன. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நேற்றுமுன்தினம் மாத்திரம், 487 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 988 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் 109 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பி.சி.ஆர். சோதனைக்கு தன்னை உட்படுத்தினார் பிரதமர் மஹிந்த!



கொரோனா வைரஸ் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மனைவியான சிராந்தி ராஜபக்ஷவும் தங்களை பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள ஆங்கில ஊடகமொன்றே இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

பிரதமரும் அவரது மனைவியும் தங்களை பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டனர் என அறிய முடிகின்றது. ஆனால் பரிசோதனை முடிவுகளில் அவர்களுக்கு தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர்களது மகனான அமைச்சர் நாமல் ராஜபக்'வும் தன்னை பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டார்.

இதேவேளை பிரதமரும் அவரது குடும்பத்தினரும் கொரோனா வைரஸ்தொற்றின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளமையால் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதைக் குறைத்துக்கொண்டுள்ளனர் என அந்த ஆங்கில ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

# கொரோனா தொடர்ந்தால் சாதாரண பரீட்சை ஒத்திவைக்க வேண்டி வரும்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் தொடர்ந்தால் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைப்பதை தவிர்க்க முடியாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 27 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டபடி பரீட்சை நடத்தப்படுமா என்பது தொடர்பாக முடிவு ஒரு வாரத்திற்குள் எட்டப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 165 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 100 பாடசாலைகள் மட்டுமே நவம்பர் 23 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டன என்றும் மேல் மாகாணத்திலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொரோனா வைரஸ் மற்றும் அது தொடர்பான அச்சத்தை கருத்தில் கொண்டு நாட்டின் சில பகுதிகளில் பாடசாலைகளை அதிகாரிகள் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்,

குறிப்பாக இந்த நிலைமை தொடர்ந்தால் இந்த நிலையைக் கருத்தில் கொண்டு தீர்க்கமான முடிவு அடுத்த வாரம் எட்டப்படும் என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இழுத்து மூடப்பட்டது அலரி மாளிகை!

## உண்மையைப் போட்டுடைத்த பஸில் ராஜபக்ஷ பிரதமரின் ஊடகச் செயலாளர் மீதும் பாய்ச்சல்

கொழும்பு,நவம்பர் 29

அலரி மாளிகை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. எவரும் அங்கு செல்ல முடியாது. நான்கூட அங்குசென்றுபணியாற்ற முடியாதுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ 'சண்டே ரைம்ஸ்' இற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகை முடக்கப்படவில்லை எனப் பிரதமரின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும் அவர் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அலரி மாளிகை முடக்கப்படவில்லை என்று பிரதமரின் ஊடகச் செயலாளர் சொன்னது முற்றிலும் பொய். அலரி மாளிகை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. என்னால் அங்குள்ள அலுவலகங்களைப் பயன்படுத்த முடியவில்லை.

உண்மையை அறிய விரும்பினால் நீங்கள் யாரையாவது அனுப்பிப் பார்க்கலாம். அந்தப் பகுதி முற்றாக மூடப்பட்டுள்ளது. பணியாளர்களை வீட்டிலிருந்து பணிபுரியுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

பிரதமரின் ஊடகச் செயலாளருக்கு தான் என்ன செய்கின்றேன் என்பது தெரியாது. உண்மைக்கு மாறான விடயங்களை தெரிவிப்பதன் மூலம் பிரதமரின் பெயருக்குக் களங்கத்தையும் அவருக்கு தர்மசங்கடமான நிலையையும் ஏற்படுத்துகின்றார்.

என்னைப் பற்றியும் பிரதமரின் ஊடகச் செயலாளர் பிழையான விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் எதனையும் மறைக்க விரும்புபவரில்லை. அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படையானவர்; முகத்துக்கு நேரே பேசுபவர்.

நாங்கள் வெளிப்படையானவர்களாக மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்காதவர்களாக இருக்கவேண்டும்.

உண்மையை மறைப்பதால் என்ன பயன்? பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட முடக்கலின் பின்னர் அலரிமாளிகைக்குச் செல்லவில்லை - என்றார்.



# குடாநாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை; மக்கள் எவரும் குழப்பமடைய வேண்டாம்!

## பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் சீற்றம்

யாழ். குடாநாட்டை முடக்குவது தொடர்பில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. ஊடகங்கள் செய்திகளை வெளியிடும்போது மக்களை அச்சுறுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான வகையில் செய்திகளை வெளியிடக்கூடாது.

- இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டை முடக்குவது தொடர்பில் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறு எந்தவிதமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

காரைநகர் பகுதியில் கொழும்பிலிருந்து வருகை தந்த ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், குறித்த நபருடன் நேரடித் தொடர்புகளைப் பேணிய 21 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த 63 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பி.சி.ஆர். முடிவுகளில் பலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டால் மாத்திரம், சில வேளைகளில் காரைநகர் பிரதேசம் முடக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் தற்போது வரை எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை - என்றார்.



# தீபத் திருவிழாவையும் குழப்ப முயன்ற படை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.29

இணுவில் கந்தசாமி கோவில், மல்லாகம் சாலம்பை முருகன் ஆலயங்களில் கார்த்திகை தீபகங்கள் ஏற்ற படையினர் தடை விதித்த நிலையில் நிர்வாகத்தினரின் முயற்சியினால் இறுதியில் அதற்கு அனுமதிக்கப்பட்டது.

கார்த்திகைத் தீபத்திருநாளான இன்றைய தினம் வீடுகள் ஆலயங்களில் தீபம் ஏற்ற தயாரான நிலையில் பல இடங்களில் படையினர், பொலிஸார் தடை விதித்தனர். இன்றைய தீபம் ஏற்றலிற்கும் மாவீரர் நாளிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது எனவும் இன்றைய தீபம் சைவ மக்களின் வழிபாடு எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து இறுதியில் தீபம் ஏற்ற அனுமதிக்கப்பட்டது. இதனால் படையினர் தடுக்கும் போது இருந்த குழப்பநிலைமை தனிந்து இயல்பாக வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

# யாழ். நல்லை மண்ணில் 'சிவகுரு' ஆதீனம் உதயம்



யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம், நல்லூரில் 'சிவகுரு' ஆதீனம் உதயமாகியுள்ளது.

திருக்கார்த்திகைத் திருநாளான ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மணி ஒலிக்கும் நேரத்தில் சிவகுரு ஆச்சிரமம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இது சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திருவேலன் சுவாமிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

# மதில் உடைந்து விழுந்ததில் காயமுற்ற சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், உப்பு வெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உயரமான காணி ஒன்றில் அமைக்கப்பட்ட மதில் இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தான்.

புளியங்குளம் - தேவநகர் பகுதியைச்சேர்ந்த தனேந்திரன் அர்ஜுன் (வயது 10) சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

இந்தச் சிறுவனின் வீட்டுக்கு அருகில் உயரமான காணியில் அமைக்கப்பட்ட மதில் காற்றுடன் கூடிய கடும் மழையால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடிந்து விழுந்த நிலையில் சிறுவன் சிக்குண்டான்.

அயலவர்களின் உதவியுடன் அரை மணி நேரத்துக்குள் சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்பு வெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'கொரோனா'வின் பிடிக்குள் இருந்து இதுவரை 17 ஆயிரம் பேர் மீண்டனர்

*கொழும்பு, நவ. 29*

*கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 346 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.*

*இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 2 ஆக அதிகரித்துள்ளது.*

*அத்துடன் 5 ஆயிரத்து 877 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இது வரை 109 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 988 ஆக அதிகரித்துள்ளது.*

# ஆனையிறவிலும் சங்குப்பிட்டியிலும் உள்வருவோரைப் பதிவு செய்யுங்கள்!

## யாழ்ப்பாணம் பொது சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.29

பிற மாகாணங்களில் இருந்து யாழ் குடாநாட்டிற்குள் வருபவர்களை முழுமையாக இனம்காண முடியாத நிலமை காணப்படுவதனால் ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டியில் படையினர் மூலம் பதிவுகளை மேற்கொண்டு சுகாதார திணைக்களத்திற்கு வழங்க ஆவன செய்யுமாறு மாகாண ஆளுநருக்கு யாழ்ப்பாணம் பொது சுகாதார வைத்திய அதிகாரி கடிதம் எழுதியுள்ளார்.

2020 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் எழுத்தில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை யில் இரு பாதைகள் ஊடாகவும் வரும் உள்ளூர் வாசிகள் அன்றி வெளிமாகாணத் தவர்கள் அனைவரதும் பதிவுகள் பேணப்பட்டு உடனுக்குடன் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குவதன் மூலமே முழுமையாக கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்த முடியும்

இவ்வாறு சுகாதார வைத்திய அதிகாரியினால் எழுதப்பட்ட கடிதத்தின் பிரதிகள் மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட பின்பே கொழும்பிலிருந்து வந்த காரை நகர் வாசி மூலம் மேலும் பரவல் ஏற்பட்ட தாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## யாழ் பல்கலை கலைப்பீட மோதல் விவகாரம்:

# மாணவர்களைத் தண்டிப்பதுடன் நின்றுவிடாமல் நிர்வாகக் குறைகளைச் சீர்செய்யவும் பரிந்துரை!

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் கடந்த மாதம் 8 ஆம்திகதி நடைற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்கு உரிய தண்டனை வழங்கும் அதேவேளை, இத்தகைய சம்பவங்கள் பல்கலைக்கழகத்துக்குள் நடைபெறுவதற்கு ஏதுவான பின்னணிக் காரணியாக இருக்கும் நிர்வாக ரீதியான குறைபாடுகளையும் சீர்செய்யுமாறு மாணவர் ஒழுக்காற்றுச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான தனிநபர் விசாரணையை நடாத்திய யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் நடராஜசுந்தரம் சமர்ப்பித்த 130 பக்கங்களைகக் கொண்ட அறிக்கையை விரிவாக ஆராய்ந்த, பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் கோ.றூங்கன் தலைமையிலான மாணவர் ஒழுக்காற்றுக்குழு, அந்த அறிக்கையில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழங்கிய வாக்குமூலங்கள் மற்றும் விசாரணை அதிகாரி நிர்வாகத்துக்கு வழங்கிய பரிந்துரைகள் என்பவற்றின் அடிப்படையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கு காரணியாக அமைந்த நிர்வாக ரீதியான குறைபாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியது.

மாணவர்களின் இதுபோன்ற முறைகேடான செயற்பாடுகளுக்கான மூலகாரணிகள் சரியாக ஆராயப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்கான சரியான வழிகாட்டல், ஒழுக்கம் பேணல் போன்ற விடயங்களில் நிர்வாகத்தின் அக்கறையீனம் களையப்படவேண்டும் என்றும், பல்கலைக்கழக மாணவ ஆலோசகர் ஒருவரும், துறைத்தலைவர் ஒருவரும் வழங்கியிருந்த வாக்குமூலங்கள் இந்தக் கலந்துரையாடலின்போது முக்கிய கவனத்தில் எடுக்கப்பட்டது.

இதன்போது, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்ட பெரும்பாலான மாணவர்கள் பொருளாதார ரீதியாக நலிவான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை கவனத்தில் எடுத்த ஒழுங்காற்றுக் குழுவினர், இவர்களில் பலரது குடும்பப் பின்னணிகள் சிக்கலானதாக இருப்பதையும் அவதானித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு மாணவரின் தந்தையார் அவரது கண் முன்னாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார் என அவர் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஏனைய மூன்று மாணவர்கள் தமது தந்தையரை இழந்தவர்களாக உள்ளதுடன், அவர்களில் ஒருவர் ஆசிரமம் ஒன்றில் வளர்ந்திருப்பதுடன், மற்றொருவரது தாயார் மறுமணம் செய்துள்ளார் எனவும் வாக்குமூலங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் இவ்வாறான சிக்கல் நிறைந்த குடும்பப் பின்னணிகள் தொடர்பாக அவர்களுக்குக் கற்பித்த விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள், மாணவ ஆலோசகர்கள் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லையா என்று தமது அறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ள ஒழுக்காற்றுக் குழுவினர், இது விசாரணையின்போது பலரும் அளித்துள்ள வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையிலான சீரான உறவு காணப்படாததை நிரூபிப்பதாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே நெருக்கமான உறவு பேணப்பட்டிருக்குமானால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுத்திருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை, அந்த வகையில் மாணவர்களின் முறைகேடான செயற்பாடுகளுக்கு நிர்வாகமும் ஒருவகையில் கூட்டுப்பொறுப்பு எடுத்தாகவேண்டும் என்றும், மாணவர்களது தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படும் அதேவேளை, இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகளும் சீர்செய்யப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், 3 வருடங்கள் ஊடகக் கற்கைநெறியைத் தொடர்ந்த மாணவர்கள், ஊடக ஒழுக்க விதிமுறைகளுக்கு மாறாக தாமே தம்மை ஒரு செய்தியின் கருப்பொருளாக்கி, பல்கலைக்கழகம் பணியிடப் பயிற்சிக்காக ஒழுங்கு செய்திருந்த ஊடகத் தொடர்புகளைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்துக்கு அவப்பெயர் ஏற்படும் விதமாக செயற்பட்டிருப்பதும், ஊடக ஒழுக்க விதிமுறைகள் குறித்து இந்த மாணவர்களுக்கு காணப்படும் தெளிவின்மை புலப்படுவதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், மாணவர்களுக்கான முறையான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும், மாணவ ஆலோசகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும், பகிடிவதை என்ற பெயரில் எழுதப்படாத சட்டங்கள் மாணவர்கள் மத்தியில் பேணப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட சில பரிந்துரைகளை வழங்கியுள்ள ஒழுக்காற்றுக்குழு, புதுமுக மாணவர்களுக்கான நிர்வாகத்தினால் நடத்தப்படும் அறிமுக நிகழ்வில் மாணவர்களின் உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் தொடர்பாக விளக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டளைச் சாசனம் மாணவர்களுக்கு தெளிவாக விளக்கப்பட்டு, அறிமுக நிகழ்வின் முடிவில் சிரேஷ்ட மாணவர்களையும் உள்ளடக்கிய ஒன்றுகூடலை நடாத்துவதன் மூலம், சர்ச்சைக்குரிய புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வுக்கான தேவையை இல்லாமல் செய்யலாம் என்றும் பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், மாணவர்கள் நாள் முழுவதும் கற்றல் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபடுவதை உறுதிப்படுத்தும் வகையில், விரிவுரைகளுக்குப் புறம்பாக, ஒப்படைகள், செயன்முறைப் பயிற்சிகள், பாடப்புறச் செயற்பாடுகள், விளையாட்டு என்பவற்றுக்கான கண்டிப்பான நேரசூசி வகுக்கப்பட்டு, அநாவசியமான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடும் வாய்ப்புக்களைக் குறைக்கவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது ஒழுக்காற்றுக்குழு.

பல்கலைக்கழகம் அடிப்படையில் ஓர் ஆராய்ச்சி மையம் என்று, தனிநபர் விசாரணை அதிகாரியான முன்னாள் வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் நடராஜசுந்தரம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியபடி, காலப் பொருத்தமான, அவசியமான விடயங்களில் விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், அவற்றில் மாணவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம், அவர்களுக்கான சிறந்த முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பொதுவான ஊடகக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு, பல்கலைக்கழகத்துக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் எவரும் செயற்படாதவாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என்பதுடன், பல்கலைக்கழக ஊடகக் கற்கைப் பாடத்திட்டத்தில், ஊடக ஒழுக்கவிதிகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டு, துறைசார் ஊடக வல்லுநர்கள் மூலம் இதற்கான பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் ஒழுக்காற்றுக்குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

# மண் லொறியால் மோதி கான்ஸ்டபிள் கொலை!

## தப்பியோடிய சாரதி கைது

குருநாகல் – கொப்பேகன பகுதியில் மண் லொறியால் மோதி பொலிஸ் கான்ஸ்டபிளைப் படுகொலை செய்த 27 வயதான அந்த லொறியின் சாரதிகைதுசெய்யப்பட்டுள்ளார்.

நிக்கவரெட்டிய பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஹாத்தலவ பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலை சுற்றிவளைப்பதற்காக நேற்று முன்தினம் நள்ளிரவு 05 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சென்றிருந் தனர்.

இதன்போது, அவர்களில் ஒருவர் மணல் லொறியை நிறுத்த முயன்றபோது, லொறியைச் சாரதி நிறுத்தாமல் அவர் மீதி மோதிவிட்டு லொறியுடன் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த 32 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் நிக்க வெரட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது, அவர் உயிரிழுந்திருந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் மீது மோதிய லொறி நிக்கவெரட்டிய பகுதியில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவை இலங்கை முழுமையாக நம்பாது!

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இடைநடுவே கைவிடும் இந்தியா போன்ற நாடுகளைத் தொடர்ந்தும் நம்பி அவர்களிடம் தங்கியிருக்காது இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நிறுவனங்களுடனும் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடனும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, நீர்வளங்கள், மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில்உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமாக இலங்கை அதன் அமைவிடத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால் சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் எம்மைவிடப் பலமான நாடுகளாக வளர்ச்சி கண் டுள்ளன. எனினும், இனியும் நாம் அதே தவறிழைத்துவிடக்கூடாது.

எனவே, அம்பாந்தோட்டை துறை முகத்தின் மூலமாக மத்திய கிழக்கு நாடு களுக்குச் செல்லும் கப்பல்களுக்கான எரிபொருள் சேவையை வழங்கவும், திருகோணமலை துறைமுகத்தைப் பயன்படுத்தி இந்தியாவினூடாக மேற்கு - கிழக்கு நோக்கி பயணிக்கும் கப்பல்களுக்கான எரிபொருள் சேவையை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். அதேபோல் விமானங்களுக்கு எரிபொருள் வழங்குதல் மற்றும் கனியவள தேவைகளை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எமது நாட்டைச் சுற்றி கனிய வளங்கள் உள்ளன. இயற்கை எரிவாயு, எண்ணெய் வளங்கள் உள்ளன. ஆனால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள எம்மால் முடியாது போய்விட்டது. இதில் பல இடங்களில் நாம் தவறிழைத்துவிட்டோம்.

குறிப்பாக 2010 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் நாம் இது குறித்த இணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்த வேளையில் அவர்களின் நிதி பற்றாக்குறை காரணமாக இடைநடுவே விலகிக் கொண்டனர்.

எனவே, நாம் இந்தியாவை மாத்திரம் நம்பி அவர்களின் தங்கி இருக்காது, இடை நடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நிறுவனங்களுடன் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது - என்றார்.

# போகம்பரை சிறையிலிருந்து நான்கு கைதிகள் தப்ப முயற்சி

## வேட்டுக்களைத் தீர்த்து அதிகாரிகள் முறியடிப்பு

போகம்பரை சிறைச்சாலையிலிருந்து தப்ப முயன்ற 4 கைதிகள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

போகம்பரை பழைய சிறைச்சாலையில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த கைதிகளில் நால்வரே தப்பிச் செல்ல முயன்றனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் எச்சரிக்கை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தே இவர்களைக் கைதுசெய்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன!

## தற்காலத்துக்கு அது ஏற்றதல்ல என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, நவ. 30

நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை (தற்காலிக ஏற்பாடு) சட்டம், தற்காலத்தில், நவீன பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போதுமான ஏற்பாடுகளைக் கொண்டதல்ல என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதானியுமான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதனால் அந்த சட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமொன்றை (சி.டி.ஏ.) கொண்டுவர முயற்சிக்கப்பட்டதாகவும், எனினும் அது தொடர்பில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமானது, தான் உள்ளிட்ட குழுவினரின் பரிந்துரைகள் பிரகாரம் வரையப்பட்ட சட்ட மூலத்தில் இருந்த பல விடயங்களைக் கொண்டிருக்கவில்லை எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணியில் அந்த சட்ட மூலமும் கடந்த ஜனவரி மாதம் அமைச்சர் தினேஷ் குனவர்தனவால் மீளப் பெறப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் விஷேடமாக இரவு ஆஜராகி சாட்சியம் வழங்கும் போதே அஜித் ரோஹண இந்த விடயங்களை வெளிப்படுத்தினார்.

21/4 உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அதிகாரம்) 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் கடந்த 2019 செப்ரெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக் குழுவில் இடம்பெற்று வருகின்றது.

ஆணைக் குழுவின் தலைவர் மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக டி சில்வாவின் தலைமையிலான மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன, ஒய்வுபெற்ற நீதிபதிகளான நிஹால் சுனில் ரஜபக்ஷ, அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து, ஒய்வுபெற்ற அமைச்சு செயலர் டப்ளியூ.எம்.எம். அதிகாரி ஆகியோர் முன்னிலையில் விசாரணை இடம்பெறுகிறது.

அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை ஆணைக் குழுவில் ஆஜரான அஜித் ரோஹணவிடம் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் அய்ஷா ஜினசேனவின் கேள்விகளுக்குப் பதிலளித்தவாறு, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண சாட்சியமளித்தார்.

அந்த சாட்சியத்தின் சுருக்கம் வருமாறு:-

உண்மையில் சுதந்திரத்துக்கு முன்னர் 1947 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட 25 ஆம் இலக்க பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் மட்டுமே ஆரம்பத்தில் எமக்கு பயங்கரவாதத்துக்கு எதிராக போராட இருந்த ஒரே சட்டமாகும். 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், அப்போதைய சூழலை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக துரையப்பாவின் கொலை, யாழில் பொலிஸ் அதிகாரிகளின் கடத்தல், கொலை போன்ற சம்பவங்களை மையப்படுத்தியே 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடை சட்டம் கொண்டுவரப்பட்டது. அது அந்தக் காலத்தில் இருந்த சூழலுக்கு அமைய, அப்போதைய விடயங்களைக் கருத்தில் கொண்டு கொண்டுவரப்பட்டது.

பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் சுதந்திரத்துக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்டது.

இவ்விரு சட்டங்களே பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்க கைவசம் உள்ள பிரதான சட்டங்களாகும்.

எனினும் தற்போது உலகில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறும் முறைமை, விதத்தை ஆராயும் போது, எம்மிடம் உள்ள பயங்கரவாதத் தடை சட்டத்தை வைத்துக்கொண்டு அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாது. அதில் பாரிய குறைபாடுகள் உள்ளன.

இதற்கு உதாரணங்களை முன்வைக்கலாம்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தில், பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கு ஒரு வரை விலக்கணம் இல்லை. இது பிரதான குறைபாடு. அத்துடன் இந்த சட்டத்தை மூலம் யாருக்கெல்லாம் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என ஆராயும் போது அங்கும் பாரிய குறைப்பாடுகள் உள்ளன.

அதாவது பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில், குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் என ஒரு வார்த்தைப் பிரயோகம் உள்ளது. அதற்கான விளக்கம், அந்தச் சட்டத்தின் 31 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதில் ஜனாதிபதி, அனைத்து நீதிபதிகள், பிரதமர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், ஆணைக்குழுவொன்றில் உறுப்பினர்கள், ஜூரி சபை ஒன்றின் உறுப்பினர்கள், முப்படையினர், பொலிஸாருக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள், அக்குற்றங்கள் தொடர்பில் சாட்சியமளிப்போருக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்த முடியுமென்பதை 'குறித்த நபர்கள்' எனும் வார்த்தைப் பிரயோகத்துக்கு விளக்கமாக அவதானிக்க முடிகின்றது.

எனினும் தற்காலத்தில், பயங்கரவாத நடவடிக்கைகள் சிவிலியன்களை இலக்காகக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. அப்படியானால் பொது மக்களைப் பாதுகாக்கும் வண்ணம் நடைமுறையில் உள்ள சட்டம் இல்லாமை பாரிய குறைபாடாகும்.

அத்துடன், அந்தச் சட்டத்தில் உள்ள குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெறும் விடயம், தடுப்புக் காவல் உள்ளிட்ட விடயங்கள் இலங்கை கையெழுத்திட்டுள்ள சர்வதேச இணக்கப்பாடுகளுடன் பாரிய முரண்பாடுகளைக் கொண்டுள்ளன.

எனவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றுக்கான பாரிய தேவை உள்ளது.

இவ்வாறான சூழலிலேயே கடந்த 2016 ஏப்ரல் 21 ஆம் திகதி அப்போதைய பிரதமரால், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை வரைய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அப்போதைய சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்புச் செயலர், சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலர், முப்படைகளின் அலுவலக பிரதானி, முப்படை தளபதிகள், பொலிஸ் மா அதிபர், முன்னாள் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலும் தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசருமான யசந்த கோதாகொட உள்ளிட்டோர் அந்த குழுவில் இருந்தனர். அதில் பொலிஸ் மா அதிபரின் சார்பில் நானே அந்தக் குழுவில் பங்கேற்றேன்.

சுமார் 28 தடவைகள் இந்தக் குழு கூடி விடயங்களை ஆராய்ந்தது. அதன் பிரகாரம் நாம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைத் தயாரித்தோம். அதன்படி 2017 செப்ரெம்பர் 17 ஆம் திகதி அந்தச் சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. நாடாளுமன்றுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலத்தில், நாம் இறுதியாக இணக்கத்துக்கு வந்து கையளித்த உத்தேச சட்ட மூலத்தில் இருந்த பல விடயங்கள் நீக்கப்பட்டிருந்தன. இது அந்த சட்ட மூலத்தைப் பலவீனப்படுத்துவதாக இருந்தது.

உதாரணமாக, தற்போது உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரகாரம் உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவி நிலை அதிகாரி ஒருவரிடம் கொடுக்கும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம், சாட்சியகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளில் பொது மக்கள் சாட்சியம் வழங்க முன்வருகின்றமை குறைவு. காரணம் அவர்கள் கண்டிப்பாக அச்சப்படுவர். எனவே குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்துக்கு சாட்சி அந்தஸ்து இருப்பது அவசியமாகும்.

எனவே நாம் புதிய சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பொலிஸ் அத்தியட்சர் அல்லது சிரேஷ்ட அத்தியட்சர் ஒருவருக்கு வழங்கப்படல் வேண்டும் என பரிந்துரைத்த போதும், அந்த விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் இருக்கவில்லை.

உலக நாடுகள் பலவற்றிலும் பொலிஸாருக்கு வழங்கும் வாக்கு மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் முறையிலான விடயங்கள் உள்ளன. பிரித்தானியாவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு வழங்கும் வாக்கு மூலம் கூட செல்லுபடியாகும்.

அதே போல் தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு தடுத்து வைத்து விசாரிப்பதற்கான காலத்தை பாதுகாப்பு அமைச்சரிடம் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் நாம் வரைந்த சட்டத்தில், அதனை 6 மாதங்களுக்கு மட்டுப்படுத்துமாறு கோரினோம். எனினும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் ஒருவரை 6 வாரங்களே தடுத்து வைத்து விசாரிக்க சந்தர்ப்பம் இருந்தது. அதிலும் 14 நாள்கள் பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரின் பொறுப்பில் தடுப்புக் காவல் பெறவும் ஏனைய நாள்கள் நீதிவான் ஒருவரின் மேற்பார்வையில் இடம்பெறவுமே அதில் ஏற்பாடுகள் இருந்தன.

அதே போல், ஒருவரைக் கைது செய்த பின்னர் அது தொடர்பில் அவரது நெருங்கிய உறவினர்களுக்கும், மனித உரிமை ஆணைக் குழுவுக்கும் அறிவிக்கும் வண்ணமான ஏற்பாடுகள் புதிய உத்தேச சட்டத்தில் இருந்தன எனத் தெரிவித்தார்.

இதன்போது ஆணைக் குழுவின் தலைவர் ஜனக டி சில்வா, ஒருவரைக் கைது செய்ததும் அது தொடர்பில் உறவினருக்கு உடனடியாக அறிவிப்பது விசாரணைகளை பாதிக்கும் அல்லவா எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண

இல்லை. ஒருவரைக் கைது செய்துள்ளதாக அறிவிப்பது, அந்த விசாரணைகளைப் பாதிக்காது. நாம் உலக அளவில் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்ட மனித உரிமைகள் தொடர்பிலான, குறிப்பாக ஐ.சி.சி.பி.ஆர். போன்ற இணக்கப்பாட்டு சட்டங்களுக்கு அமைய மக்களின் உரிமைகளை மதித்து நடப்பதை அவை உறுதி செய்யும்.

குறித்த சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதில் இருந்து அது பாதுகாக்கும் எனத் தெரிவித்தார்.

இதனைவிட, குறித்த உத்தேசசட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற அதிகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விரிவாக சாட்சியமளித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, 2002 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இந்திய பயங்கரவாதத் தடைச் சட்டம், 2019 ஆம் ஆண்டு பிரித்தானியா அறிமுகம் செய்த பயங்கரவாதத் தடுப்பு மற்றும் எல்லை பாதுகாப்பு சட்டத்தில் உள்ள விடயங்களைத் தழுவி இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒன்று கொண்டுவரப்படுமாயின் அது சிறந்தது என சாட்சியமளித்தார்.

இது தொடர்பாக மேலதிக சாட்சியங்கள் கடந்த சனிக்கிழமை இரவும் இடம்பெற்றன.

# காரைநகர் இந்து 3 நாள்கள் மூடப்படுகிறது




காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாள்கள் மூடப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் ஆலோசனைக்கு அமைய இன்று திங்கட்கிழமை தொடக்கம் வரும் புதன்கிழமை வரை 3 நாள்களுக்கு காரைநகர் இந்துக் கல்லூரி மூடப்படுகிறது.

காரைநகரில் கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமாகப் பழகிய ஆசிரியர் ஒருவர், காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்பிக்கின்றார். அவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் அவரது பி.சி.ஆர். பரிசோதனை வரும் புதன்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்று அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்தால் மறுநாள் வியாழக்கிழமை பாடசாலை ஆரம்பிக்கப்படும் – என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# எண்ணெய்க் குதம் பயன்படுத்தும் அதிகாரம் இந்தியாவுக்கு இல்லை!

## ஜே.வி.பி. திட்டவட்டம்



ரணில் அரசாங்கம் 2003 ஆம் ஆண்டு திருகோணமலை எண்ணெய் குதங்களை ஆறுமாத கால தற்காலிக குத்தகைக்கு இந்தியாவிற்கு பெற்றுக்கொடுத்ததே தவிர ஆறு மாதங்களின் பின்னர் புதிய உடன்படிக்கை புதுப்பிக்கப்படவில்லை. எனவே திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியா பயன்படுத்துவதற்கான எந்தவொரு ஒப்பந்தமும் இப்போது இல்லாத நிலையில் உடனடியாக எண்ணெய்க் குதங்களை இலங்கை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜே.வி.பியியன் தலைவர் அனுரகுமார திசாநாயக சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

திருகோணமலையில் எமக்கென்று எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இருந்தது, 1930 ஆம் ஆண்டு பிரித்தானியாவால் திருகோணமலை சீனக்குடாவில் இந்த எண்ணெய் களஞ்சிய நிலையம் உருவாக்கப்பட்டது. அப்போது 102 எண்ணெய் குதங்கள் இருந்தன, எனினும் பிற்காலத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இவற்றை விலைகொடுத்து வாங்கியது.

1970 ஆம் ஆண்டுகள் வரையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சரியாக இதனைப் பயன்படுத்தியது. யுத்தத்தின் பின்னர் இது கைம்மாற ஆரம்பித்தது. எமது நாட்டுக்கு இரண்டு வாரங்களுக்குத் தேவையான எண்ணெய் குதங்களே இப்போது எம்மிடம் உள்ளன, ஆனால் திருகோணமலை எண்ணெய் களஞ்சிய நிலையத்தைப் பயன்படுத்தினால் ஒன்றரை மாதங்களுக்குத் தேவையான எண்ணெயைக் களஞ்சியப்படுத்த முடியும்.

அவ்வாறான நிலையிலேயே 2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு, இந்த எண்ணெய்க் குதங்களைத் தற்காலிகமாக இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுத்தது. அதுவும் ஆறுமாத கால குத்தகைக்கே ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆறு மாதங்களின் பின்னர் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் எனக் கூறப்பட்டது, ஆனால் புதிய உடன்படிக்கை செய்துகொள்ளப்படவில்லை.

இந்தியாவுடன் செய்துகொண்ட தற்காலிக உடன்படிக்கை முடிந்துவிட்டது, இது தொடர்பில் இந்தியாவுடன் எந்தவோர் உடன்படிக்கையும் இப்போது இல்லை. ஜே.ஆர் அப்போதே இந்த குதங்களை அமெரிக்காவுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார். அதுதான் இலங்கையில் பிரிவினைவாதத்தை உருவாக்க இந்தியா தலையிடக் காரணியாகவும் அமைந்தது. அதன் பின்னரே இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தத்தை செய்துகொண்டது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் மூன்றாவது தொகுதியாக இந்த எண்ணெய் குதங்கள் தொடர்பான சரத்தொன்றை இணைத்துக்கொண்டனர். எப்படியேனும் இதனை அபகரிக்க வேண்டும் என்பதில் இந்தியா ஆர்வமாக இருந்தது. அதற்கமைய 2003 ஆம் ஆண்டு இலங்கையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. இந்த நிலம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது, எண்ணெய் குதங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானவை.

அவ்வாறானதொரு நிலையில் இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுக்க எந்த உரிமையும் இல்லை. அவ்வாறு இருந்தும் ஒரு மாதத்திற்கு 10 ஆயிரம் டொலர்கள் என்ற ரீதியில் ஆறுமாத காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டது. ஆனால் அதற்கான குத்தகைத் தொகையைக் கூட இந்தியா வழங்கவில்லை என்றே கூறப்படுகின்றது.

இந்த கைம்மாற்றல் தொடர்பாக இன்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, இந்த எண்ணெய்க் குதங்களை அரசாங்கம் மீண்டும் எமக்கே பெற்றுக்கொள்ளுமா என அறிவிக்க வேண்டும்.

இந்த எண்ணெய் களஞ்சியசாலையை நாம் பயன்படுத்தினால் ஆண்டுக்கு போக்குவரத்து செலவுகளுக்காக செலவழிக்கும் 70 கோடி ரூபாவைச் சேமிக்க முடியும். எனவே அரசாங்கம் இது தொடர்பில் வெளிப்படையாக உண்மைகளைத் தெரிவிக்க வேண்டும். எமது வளங்களை எமக்குப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எடுக்க முடியுமா?

பேருக்கு தேசியவாதிகள் என கூறிக்கொண்டு நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதா தேசப் பற்று? நடிப்பிற்காக மாரிலும் நிலத்திலும் அடித்துக்கொண்டு தேசப் பற்றாளர்கள் எனக் கூறிக்கொண்டு இல்லாது அதனை செயலில் காட்ட வேண்டும். இந்தியாவுடன் ஒப்பந்தம் இல்லாது, அவர்கள் வரி செலுத்தாத ஒரு வளத்தை ஏன் இந்தியாவிற்கு நாம் கொடுக்க வேண்டும்? உடனடியாக இதனை மீண்டும் இலங்கை பெற்றுக்கொள்ள வேண்டும்.– என்றார்.

# தெற்காசியாவில் மின் கட்டணம் கூடிய நாடு இலங்கை ஆகும்!

## ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு

மின் உற்பத்தி நிலையங்களால் நாட்டுக்கு வருமானம் இல்லாவிட்டாலும் பாரியளவில் நஷ்டம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தெற்காசியாவின் மின் கட்டணம் கூடிய நாடு இலங்கையாகும் என ஆளுங்கட்சி உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மின் உற்பத்தி நிலையங்கள் நாட்டை நாளுக்கு நாள் கடன் நிலைக்கு கொண்டுசெல்லும் நிறுவனங்களாகும். இந்த நிறுவனங்களால் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. அதனால் லாபம் இல்லாவிட்டாலும் ஏற்படும் நட்டத்தை கட்டுப்படுத்திக்கொள்ள அனைத்து அரசாங்கங்களும் நடவடிக்கை எடுத்தபோதும் எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மின்சாரசபை கூடுதலாக செயற்படுவது டீசல் மூலமாகும். அதற்காக பாரியளவில் நிதி செலவிடப்படவேண்டி ஏற்படுகின்றது. இதற்காக செலவிடப்படும் நிதியை மின் கட்டணத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது. நிவாரண அடிப்படையிலேயே வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

அப்படி இருந்தும் தெற்காசியாவில் மின்கட்டணம் கூடிய நாடு இலங்கையாகும். அதனால் எமது நாட்டுக்கு வரும் முதலீட்டாளர்களும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது மின் கட்டணம் தொடர்பில் மாற்றுவழி ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்றே தெரிவிக்கின்றனர்.

2005 இற்கு முன்னர் எமது நாட்டில் மின் உற்பத்தி மகாவலி நீர்த்தேக்கம் மற்றும் லக்ஷ்பான மின் உற்பத்தி நிலையங்களால் மாத்திரமே நீர் மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. அதுதவிர மின் உற்பத்தி டீசல் ஊடாகவே பெற்றுக்கொண்டோம். அதன் பின்னரே 2007இல் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு அதன் மூலம் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

அதேபோன்று (எல்.என்.ஜி.) திரவ இயற்கை எரிவாயு அமைக்கப்பட்டாலும் டீசல் ஊடாகவே அது செயற்படுகின்றது. அதனால் பாரிய செலவு ஏற்படுகின்றது அதனால் மின் உற்பத்திக்கு டீசல் செலவிடப்படுவதை குறைக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே ஏற்படும் நட்டத்தை கட்டுப்படுத்தலாம்.– என்றார்.

# சிறுநீரக நோயாளர்களாக மக்கள் மாறுகின்றமை தடுக்க வேண்டும்!

## சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வுகளை வழங்காது நிரந்தரமாக குடிதண்ணீர் திட்டமொன்றை உருவாக்கிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, நீர்வழங்கல், மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

வட மாகாணத்தில் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தற்காலிக நீர் வழங்கல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதே தவிர நீண்டகால குடிதண்ணீர் திட்டம் எதுவும் இல்லை.

இப்போது வரையில் 45 வீதமானவர்களுக்கே சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கின்றது. அதுவும் மழைநீர் அல்ல, நிலத்தடி நீரே அவ்வாறு குடிதண்ணீராக வழங்கப்படுகின்றது. இந்த நிலத்தடி நீர் சிறுநீராக நோயாளர்களை உருவாக்குகின்றது.

நாட்டில் சிறுநீரக நோயாளர்கள் அதிகமாக உள்ள மாவட்டத்தில் வன்னி மூன்றாவது இடத்தில் உள்ளது. எனவே குடிதண்ணீர் வழங்கவும் தூய்மையாகவும் நோய்கள் இல்லாத வகையிலும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்லாறு, பாலியாறு ஆகிய ஆறுகளின் ஊடாக அதிகளவிலான நீர் கடலுக்குச் செல்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் வரும் மண்டைக்கள் ஆறு ஊடாகவும் அளவுக்கு அதிகமான நீர் கடலுக்குச் செல்கின்றது. எனவே இந்த மூன்று இடங்களை மையப்படுத்தி நீர் தேக்கங்களை அமைத்து எமது பகுதி மக்களுக்கு குடிதண்ணீரை வழங்க முடியும்.

குடிதண்ணீர் எமது மக்களுக்கு அத்தியாவசியமானதாகும், அதேபோல் எமது மக்கள் சிறுநீரக நோயாளர்களாக மாறுகின்றமையைத் தடுக்கவும் வேண்டும். மேலும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் ஒன்பது நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் நீர் வழங்கல் சபையில் பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே இவர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அரசியல் பலம் இல்லாத நபர்கள் என்பதால் தொடர்ச்சியாக நிரந்தர வேலை இல்லாது ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.– என்றார்.

# இனவாதி, பயங்கரவாதி என்று எம்மைப் பார்ப்பது வேடிக்கை!

## கருணாகரன் சுட்டிக்காட்டு

எமது மக்கள் சார்ந்த, அவர்களின் தேவைகள் சார்ந்த அவர்களின் வாழ்வுரிமை சார்ந்த விடயங்களை எடுத்துரைத்தால் எம்மை பிரிவினைவாதி, இனவாதி, பயங்கரவாதி, இவர்களை நாடாளுமன்றத்திலிருந்து அகற்ற வேண்டுமென இந்த சபையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உட்பட பலரும் உரையாற்றுகின்றீர்கள், இது எனக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, நீர்வழங்கல் மின்சக்தி, வலுசக்தி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எம்மைப் பிரிவினைவாதிகளாக, இனவாதிகளாக, பயங்கரவாதிகளாக பார்க்காதீர்கள். எமது சார்ந்த, எமது பிரதேசம் சார்ந்த ,எமது மக்கள் சார்ந்த, அவர்களின் தேவைகள் சார்ந்த அவர்களின் வாழ்வுரிமை சார்ந்த விடயங்களை எடுத்துரைத்தால் எம்மை பிரிவினைவாதி, இனவாதி, பயங்கரவாதி, இவர்களை நாடாளுமன்றத்திலிருந்து அகற்ற வேண்டுமென இந்த சபையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உட்படப் பலரும் உரையாற்றுகின்றீர்கள், இது எனக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது. இது உங்களின் அறியாமையாயா என சந்தேகப்படத் தோன்றுகின்றது.

தயவு செய்து உலக விடுதலைப் போராட்ட நாயகர்களின் வரலாற்றை இதய சுத்தியோடு உங்கள் அறிவுக்கண் திறந்து நோக்குங்கள். ஆயுதப்புரட்சி மூலம் மக்கள் விடுதலையை நாடிய எத்தனையோ தலைவர்கள் காலப்போக்கில் ஜனநாயக வழி வந்தமையே உலக வரலாறு.

உதாரணத்துக்கு நெல்சன் மண்டேலா, யசீர் அரபாத், ஹசன்டி டீரோ ஆகியோரைக் குறிப்பிட முடியும். எமது நாட்டில் கூட 1971 இல் ஆயுதம் தூக்கி பின்னர் ஜனநாயகவழி வந்த ஜே.வி.பி.யினரை அன்று பயங்கரவாதிகள் என்றே அழைத்தனர். இன்று அவர்கள் மீது அப்படி ஒரு வார்த்தைப் பிரயோகத்தை நீங்கள் எவரும் பிரயோகிப்பதில்லை.

ஆனால் ஆயுதமேந்தி பின்னர் ஆயுதத்தைக் கைவிட்டு வாக்குரிமை மூலம் இந்த உயரிய சபைக்கு வந்து நாம் உரையாற்றும்போது எம் மீது மட்டும் ஏன் உங்கள் குரோதம்? ஓர வஞ்சனை? ஏன் உங்கள் கண் மூடிய பார்வை? உங்கள் மனக்கதவை திறவுங்கள், உண்மையை உணருங்கள். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# பிணையில் விடுதலையான ரிஷாத் கல்கிசை ஹோட்டலில் தனிமை!

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை பிணையில் விடுவிக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த 25 ஆம் திகதி உத்தரவிட்டிருந்த நிலையில், தற்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டு, சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். நீதிமன்ற பிணை உத்தரவின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதன் முடிவுகளின் அடிப்படையில், அவருக்கு கொரோனா தொற்று பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே அங்கிருந்து, அரசாங்கம் தனிமைப்படுத்தல் நிலையமாக அறிவித்துள்ள கல்கிசை ஹோட்டல் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீன், தற்போது கட்டணம் செலுத்தி அந்த ஹோட்டலில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது, புத்தளத்தில் இருந்து 222 இ.போ.ச. பஸ்களில் 12 ஆயிரம் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு சிலாவத்துறை பகுதிக்கு, வாக்களிக்கச் செல்ல போக்குவரத்து வசதிகளை செய்துகொடுத்தமை ஊடாக, நீண்டகாலமாக இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கான திட்டத்தின் 9.5 மில்லியன் ரூபாவை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பிலான விசாரணைகள் கடந்த 25 ஆம் திகதி கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, முன்வைக்கப்பட்ட பிணைக் கோரிக்கைகளை ஏற்று ரிஷாத்துக்கு பிணை வழங்கப்பட்டது.

அதன்படி, ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வெளிநாட்டு பயணமும் தடை செய்யப்பட்டது. அதன்படி அவரது கடவுச் சீட்டை அடுத்த வழக்குத் தவணையில் மன்றில் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத் தடை குறித்து குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தல் அனுப்பியது. அத்துடன் சி.ஐ.டி. விசாரணைகளுக்கு அழைக்கும் போது கண்டிப்பாக அந்த விசாரணைகளுக்குச் செல்ல வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தது. அதன்படியே, சுமார் 38 நாள்களின் பின்னர் ரிஷாத் பதியுதீனுக்கு பிணையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறைக் கடலில் குளித்த 2 இளைஞர்களைக் காணவில்லை!



காங்கேசன்துறைக் கடலில் குளித்த இளைஞர்கள் இருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காங்கேசன்துறை தல்செவன இராணுவ நட்சத்திர விடுதிக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

தையிட்டியைச் சேர்ந்த 24 மற்றும் 32 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயுள்ளனர்.

இருவரையும் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பிள்ளையான், லலித் வீரதுங்க மீதான நீதிமன்றத் தீர்ப்புகள் நியாயமானவை!

### வக்காலத்து வாங்குகின்றார் நீதி அமைச்சர்

பிள்ளையான் மற்றும் லலித் வீரதுங்க ஆகியோருக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் நியாயமானவை. மக்களின் நம்பிக்கையை இல்லாமலாக்கும்வகையில் நீதிமன்றத்தின் மீது விரல் நீட்டுவது பயங்கரமான விடயமாகும் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நீதிமன்றத் தீர்ப்புக்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விமர்சிப்பது மிகவும் கீழ்த்தரமான செயலாகும். நீதிமன்ற சுயாதீனத் தன்மையைப் பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். அதற்காக அவரவருக்கு தேவைக்கமைய தீர்ப்புவழங்க நீதிமன்றங்களுக்கு கடமையில்லை. அண்மைக்காலத்தில் நீதிமன்றங்களால் அதிகமான வழக்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை தெரிவுசெய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்பு அல்ல.

கடந்த 5 வருடத்தில் நீதிமன்ற துறைக்கு பாரிய அழுத்தம் ஏற்படுத்தும்வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றன. பொலிஸ் கட்டளைச்சட்டத்துக்கு முரணாக நிதி குற்றப்புலனாய் பிரிவு ஆரம்பித்தார்கள். பொலிஸ் மா அதிபருக்கு பொலிஸ் திணைக்களம் அமைக்கமுடியாது. அதனை அதற்கு சம்பந்தமான அமைச்சரே மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று ஊழல் ஒழிப்பு பிரிவு என்ற ஒன்றை அமைத்து, அதனை அரசியலாக்கி, நபர்களைத் தெரிவுசெய்து பொய் வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்குகள் தற்போது விசாரணைக்கு வரும்போது, முறையான சாட்சிகள் இல்லாததமையால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அது சாதாரண விடயம்.

மேலும் அண்மையில் வழங்கப்பட்ட லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக இருந்த வழக்கு தீர்ப்பு தொடர்பாக நாடாளுமன்றத்தில் பாரியளவில் விமர்சிக்கப்பட்டது. அது சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட தீர்ப்பாகும். சட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற தீர்ப்புகளை விமர்சிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் மக்களின் நம்பிக்கையை இல்லாமலாக்கும் வகையில் நீதிமன்றத்தின் மீது விரல் நீட்டுவது பயங்கரமான விடயமாகும். நீதிமன்றத் தீர்ப்புக்களை விமர்சிப்பதற்கு முன்னர் அதுதொடர்பான தீர்ப்புகள் பற்றி வாசித்துப்பார்க்கவேண்டும்.

அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானின் வழக்கு தீர்ப்பு தொடர்பாகவும் பாரிய விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவருக்கு எதிரான நபர் ஒருவர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் 5 வருடம் சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயாதீனமாக வழங்கப்படவில்லை என்ற அடிப்படையில் மேன் முறையீட்டு நீதிமன்றம் அந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரித்துள்ளது. அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துக்கு பின்னர் பிள்ளையான் எம்.பிக்கு எதிராக எந்த சாட்சியங்களும் இல்லை. அதனால் நீதிமன்றம் அவருக்கு பிணைவழங்கியிருக்கின்றது.

எனவே ஜனநாயகத்தின் பிரதான மூன்று தூண்களில் ஒன்றாக இருக்கும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். நீதிமன்றங்களை விமர்சித்து, நீதிமன்றம் குறித்து மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை இல்லாமலாக்க வேண்டாம். - என்றார்.

## 488 இலங்கையர்கள் தாய்நாடு திரும்பினர்!

கொழும்பு, நவ. 30

கொரோனா பரவல் காரணமாக நாட்டுக்கு திரும்ப முடியாது ஏனைய நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 488 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலின் துபாயிலிருந்து 370 பேரும், மாலைதீவிலிருந்து 69 பேரும், கட்டாரின் தோஹாவிலிருந்து 45 பேரும், ஆஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து நான்கு பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் தனியார் வைத்தியசாலை ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கொழும்பு,கம்பஹாவில் சில பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சிலவற்றை விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கடற்கரை பொலிஸ் வலயம், புறக்கோட்டை, மட்டக்குளி ஆகிய பகுதிகள் இன்று அதிகாலை 5 மணிக்கு விடுவிக்கப்படும் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்குளி பொலிஸ் பிரிவில் ரன்திய உயன வீட்டுத் திட்டம் மற்றும் பேர்சி யூன் தெற்கு ஆகிய பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் ராகம, நீர் கொழும்பு ஆகிய பகுதிகளையும் நாளை அதிகாலை 5 மணிக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மற்றொரு செய்தி 07 ஆம் பக்கத்தில்)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir